
குமரகுருபரன்




மலர் 11 1960-ஆ சித்திரைத் திங்கள் இதழ்
தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

உள்ளுறை

குற்ருலம் அருவி



படம்:- ஆடுதுறை ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் உதவியது

உ

திருச்செந்திலாண்டவன் துணை

தமிழன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு !

திருக்குறள் - உரைக்கொத்து

மலிவு அடக்கவிலைப் பதிப்பு

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் திருக்குறள் பதிப்புநிதி வெளியீடு

பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் உரைகளுடனும் ஆங்கில மொழிபெயர்ப்பும் அடங்கியது.

		பக்கம்	விலை ரூ.	புத்தக அஞ்சல் செலவு	பதிவுப் புத்தக அஞ்சல் செலவு
1.	அறத்துப்பால்	372	1–37	0–32	0–82
2.	பொருட்பால்	816	2–75	0–65	1–15
3.	காமத்துப்பால்	336	1–20	0–29	0–79

ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு 20% கமிஷன் உண்டு.

கிடைக்குமிடங்கள்:-

1. திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
   வக்கீல், ஸ்ரீவைகுண்டம்
   (திருநெல்வேலி ஜில்லா)

2. "தியாகராஜ விலாசம்"
   53, பிள்ளையார் கோவில் தெரு,
   திருவல்லிக்கேணி, சென்னை – 5

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 11 | 1960-ஆம் சித்திரைத் திங்கள் | இதழ் 4

சிதம்பரச் செய்யுட் கோவை

தருமையாதீனம் முதுபெரும்புலவர்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசக அடிகள்

(கட்டுரை 33)

சிவபெருமானை, அடியார் காண்பதற்கு அரியவன் என்பர். எளியவன் என்றும் அடுத்துக் கூறுவர். இவ்வுண்மையைத் திருமுறை முதலிய சைவ நூல்களிற் பரக்கக் காணலாம். ஒரு பொருள் மறுதலைப்பட்ட இருபண்புடையதாதல் பொருந்துமோ எனலாம். அருமையும் எளிமையும் ஒன்றற்கு ஒன்று மறுதலைப் பண்பேயாகும். ஆயினும் அவ்விருபண்பும் சிவபெருமான்பால் அமைந்திருக்கும் வண்ணத்தை ஆய்ந்துணர்தல் வேண்டும். உணரின் அப்பொருத்தமும் பொருந்தாமையும் தெளிவாகும். உலகிற் செல்வம் எல்லார்க்கும் அரியதும் அன்று, எளியதும் அன்று, பலர்க்கு அரியது. சிலர்க்கு எளியது. ஒரு காலத்தில் அரியது. ஒருகாலத்தில் எளியது. அன்ன தன்மையன

பல உள. அவைபோல ஆண்டவன் எல்லார்க்கும் அரியனு மல்லன், எல்லார்க்கும் எளியனுமல்லன். அவனைக் காணக் கருதிக் கசிந்துருகும் அடியவர்க்கு எளியவன். காதலும் கசிவும் கருத்தின் உருக்கமும் கண்ணீர்ப் பெருக்கமும் பிறபண்பும் கன விலும் காணுதார்க்குக் கடவுள் காண்டற்கு அரியவன் ஆகாது எளியவன் ஆவனே? காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓது வார்க்கு அவ்வேத மெய்ப்பொருள் எளியதாகாது அரியதாமோ?

'தூண்டு சுடர் அனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கு அரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்'

என்றது தமிழ்மறை. ஏன் இவ்வாறு கடவுள் தன்னைக் கருதும் அடியவர்க்கு எளியனும் கருதாதார்க்கு அரியனுமாக இருத்தல் வேண்டும்? இது தக்கதொருவினவே. அதற்குத் தக்க பல விடைகளும் உள, அவற்றின் ஒருமைக் கருத்தாக உள்ள விடையை நோக்குமின்! கடவுளைக் காண்டல் வேண்டும் என்பது அடியவர் வேட்கை. அவனைக் காணக் கருதவே இல்லை, உல கையே நுகரவேண்டும் என்பது ஏனையோர் எண்ணம். அவ்விரு திறத்தார்க்கும் அவ்வவ் விருப்பத்தை நிறைவேற்றுவதும் அக் கடவுள் செயலே. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'

கடவுளைக் காணுதார் செல்லும் வழிபொய் வழி. காண விரும்பும் அடியவர் ஒழுகும் நன்னெறி மெய்ந்நெறி. மெய்ந்நெறி யில் வழுவாத அடியவர்க்கு, அந்நெறியே கடவுளுருவாய்த் திகழும். அதனால் 'மெய்ந்நெறிகண்டாய்' என்றார் பொய்ந் நெறியிற் புகுந்தமீண்ட மெய்ந்நெறியப்பர். அத்தகைய கடவுளை அப்பரும் அவரைப் போன்றவரும் ஆகிய அருளாளர் திருவுள் ளத்திலேதான் சிறக்கக் கண்டு வழிபடலாம். 'செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ மாலறநேயமலிந்தவர் வேடம் 'ஆலயம்' எல்லாம் அரன் அல்லவோ? 'விரதமெல்லாம் மாண்டமனம்' அவர்க்கே சொந்தம். அம்மனத்தில்தான் சிவபிரான் நிலையாக வாழ்வான்.' அதனுல்,

'விரதம் எல்லாம் மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்' என்று கடவுள் இருக்கும் இடத்தை உணர்த்தியருளினர் தாண்டகச் சதுரர். அவனே அகத்தே காணும் நிலை அது. புறத்தே காண்பது எங்கு? திருமறைக் காட்டுக்குச் செல்க. உமையம்மையார் திருமணவாளனாகக் கண்டு மும்மலம் விண்டு பேரின்பம் கொண்டுவாழ்க. இதை அறிய 'மறைக்காட்டுறையும் மணாளன் தானே' வரல் வேண்டும்.

சிவபிரானது 'தன்மையாரும் அறிவார் இல்லை' (சம்பந்தர் 1525) எனினும், 'சொற்பதத்தார் சொற்பதமும் கடந்துநின்ற சொலற்கரிய சூழலாய் இது உன் தன்மை' என்று அப்பர், அறிதற்கு அரிய அத்தன்மையை இது எனச் சுட்டிக் காட்டியருளினர். இதனாலும் அருமையும் எளிமையும் எளிதிற்புலப்படும். 'அந்தம் ஆதி அயனும் மாலும் ஆர்க்கும் அறிவரியான்' ஆயினும், 'சிந்தையுள்ளும் நாவின்மேலும் சென்னியும்மன்னினான் வந்து என் உள்ளம் புகுந்து மாலைகாலை ஆடுவான் கந்தமல்கு கானூர் மேயஎந்தை பெருமானே' என்றதும் திருஞானசம்பந்தமே. இதில் அரிது அயன் முதலோர்க்கு. எளிது ஞானப்பாலுண்டவர்க்கு, 'மாலையாடுவார்' என்றது ஆராய்ந்தால் விளங்கும்.

1) 'உரைக்கும் கழிந்துஇங்கு உணர்வரியான் உள்குவார்வினையைக்
கரைக்கும் எனக் கைதொழுவதல்லால் கதிரோர்கள் எல்லாம்
விரைக்கோள் மலரவன்மால் எண்வசுக்கள் ஏகாதசர்கள்
இரைக்கும் அமிர்தர்க்கு அறியவொண்ணான் எங்கள் ஏகம்பனே'

2) 'நுன்கழலடி போற்றாக் கயவர்நெஞ்சிற் குய்யம் பெய்தாய்'
(குய்யம்–குஹ்யம், மறைவு, இரகசியம்)

3) 'சீலத்தராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு அணியன;
சேயன தேவர்க்கு ஐயாறன் அடித்தலமே'

4) 'சேயவன்காண் நினையார்க்கு; சித்தம் ஆரத்
திருவடியே உள்கி நினைந்துஎழுவார் உள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார்கச்சி
யேகம்பன்காண் அவன் எண்ணத் தானே'

5) 'மெய்யர் மெய்ந்நின்றவர்க்கு; அல்லாதவர்க்கு
என்றும் பொய்யர் புகலூர்ப் புரிசடையாரே!

6) 'மெய்யானைத் தன்பக்கல் விரும்புவார்க்கு;
விரும்பாத அரும்பாவியவர்கட் கெல்லாம்
பொய்யானைப் புறங்காட்டிலாடலானைப்
பொன்போதிந்த சடையானைப் பொடிகொள்பூதிப்
பையானை'

7) 'மறந்தானைத் தன்(னை) நினையா வஞ்சர்தம்மை
அஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர்க்கு என்றும் சிறந்தானை'

8) 'வஞ்சனையால் அஞ்செழுத்தும் வழுத்துவார்க்குச் சேயானை.'

9) 'துரி சறத்தொண்டு பட்டார்க்கு எளியானை
யாவர்க்கும் அறியான்றன்னை.' (அப்பர்)

10) 'பேர்ந்தவர்க்குச் சேயார்; அடியார்க்கு அணியவர்'
தொழுவார்க்கு எளியாய்'

11) 'உகந்து உள்கிநண்ணுதார்க்கு
அரியானை அடியேர்க்கு எளியானை' (சுந்தரர்)

12) 'அருமந்ததேவர் அயன்திருமாற்கு அரியசிவம்
......என்உளம் புகுந்த திருவந்த வாபாடித்
தெள்ளேணம் கொட் டாமோ'

13) 'ஆவாஅரி அயன் இந்திரன் வானோர்க்கு அரியசிவன்
வாவா என்று என்னையும் பூதலத்தே வலித்துஆண்டு
[கொண்டான்'

14) 'அன்பர்க்கு மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை.'
(மணிவாசகர்)

என்பனவும் பிறவும் இறைவன் அருமையும் எளிமையும்; மெய்ம்மையும் பொய்மையும்; சேய்மையும் அணிமையும்; எய்தலும் எயாமையும்; மறத்தலும் மறவாது சிறத்தலும் இனிது விளங்கும். விளங்கின், சிவபிரானை மறவாது, போற்றி எளிதிற் பெற்று 'நிலையுடைய பெறுஞ் செல்வம் நீடுலகிற் பெறல்' வேண்டும். இதுவே சைவர் எல்லார்க்கும் பிறவிப் பெரும்பலனாகும்.

ஆசிரியர் குமரகுருபரர் அருளியதையும் காண்மின்!

'உருவலன் அருவலன் ஒருவன்மற் றிருவருக்கு
அரியவன் எனஉணர்ந்து அறைகுநர் அறைகமன்;
பரவைதன் மனைவயின் பாவலன் ஏவலின்
இருமுறை திரிதலின் எவியன்என்று எளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து.'

இங்கே, இறைவன் எளிமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது சுந்தரப் பெருமாள் அருள் வரலாற்றின் ஒரு பகுதி. அதிலும் விழிப்பு வேண்டும் நமக்கு. 'அரியயற்கு அரியார் தாமும் ஆயிழையாரை நோக்கி உரிமையால் ஊரன் ஏவ மீளவும் உன்பால் வந்தோம்; முருகலர் குழலாய்! இன்னம் முன்புபோல் மறுதே நின்பாற் பிரிவுற வருந்துகின்றான் வரப்பெற வேண்டும் என்றார்' என்று திருத்தொண்டர் புராணம் உணர்த்துகின்றதாலும் சிவபிரானது அருமையும் எளிமையும் புலப்படும். படினும், பத்தியின் மிகுதியால் அதன் சத்தியைத் தவறான நெறியிற் பயன் படுத்தலாகாது, சுந்தரமூர்த்திகள் அவ்வகைக்கு முற்றும் தக்க வர்கள். அவர்கள் சென்ற நெறியெல்லாம் செந்நெறியாம்படி நின்ற பரிசு அறி'ய நமக்குச் சிறிதேனும் வன்மை உண்டோ? உண்டேனும் அவ்வாறே ஆண்டவனை நாமும் ஏவ எண்ணலாகா தன்றோ? அதிலே விழிப்பாயிருப்பது திருவருளைச் செழிப்பாகப் பெற உதவும். (தொடரும்)

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி
வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

மலர் 11, இதழ் 3-ன் தொடர்ச்சி

கும்பஞ் சுமந்தமத வெள்ளநீர்
 கோட்டுங் கோடுங்களி றிடும்போர்வையான்
குடிலகோ டீரத் திருந்துகோண்
 டங்நலார் கோய்தளிர்க் கைவருடவும்
செம்பஞ் சுறுத்தவும் பதைபதைத்
 தாரழற் சிகையெனக் கோப்புளிக்குஞ்
சீறடிகள் கன்றிச் சிவந்திடச்
 செய்வதுந் திருவுளத் தடையாதுபோற்
றம்பஞ் சுமந்தீன்ற மானிட
 விலங்கின் தனிப்புதல்வ னுக்குவட்டத்
தண்குடை நிழற்றுநினை வம்மென
 வழைத்தனள் தழைத்திடு கழைக்கரும்போன்
றம்பஞ் சுடன்கோண்ட மகரக்
 கோடிக்கோடியோ டம்புலீ யாடவாவே
ஆணிப்போன் வில்லிபுணர் மாணிக்க
 வல்லியுட னம்புலீ யாடவாவே. 69

குடம் போன்ற மத்தகத்தையுடைய மதநீர்ப் பெருக்குள்ள கொடிய யானை தந்த தோலைப் போர்த்தியவனான சிவபெருமானது வட்டமான சடாமுடியிலிருந்து கொண்டு தெய்வ மங்கையர் தமது பறிக்கப் பெற்ற கைகளால் வருடவும் செம்பஞ்சுக்குழம்பை ஊட்டவும் துடிதுடித்து நிறைந்த நெருப்புக்

குழம்பு போலக் கொப்புளிக்கின்ற சிறிய பாதங்கள் கன்றிச் சிவக்கும்படி செய்ததையும் திருவுளத்திற் கொள்ளாமல் பொற் கம்பம் சுமந்து பெற்ற நரசிங்கத்தின் ஒப்பற்ற மைந்தனாகிய மன் மதனுக்கு வட்டமாகிய தண்ணிய குடைபோல் நிழல் செய்கின்ற உன்னை வருகவென அழைத்தாள். செழிந்த கரும்புவில் ஒன்றைப் பஞ்ச பாணங்களுடன் கொண்ட மீனக்கொடியையுடைய கொடி போன்றவளாகிய அம்மையோடு சந்திரனே! விளையாட வருவா யாக. ஆணிப்பொன்னாலாகிய மேருமலை வில்லியான சிவபெரு மானைக் கலந்திருக்கின்ற மாணிக்கவல்லியோடு சந்திரனே! விளை யாட வருவாயாக.

துளிதூங்கு தெள்ளமுத வெள்ளருவி
பொழியுநின் தோன்மரபு றழையவந்து
தோன்றிடுங் கௌரியர் குலக்கோழுந்
தைக்கண்டு துணைவிழியு மனமுநின்று
களிதூங்க வளவளாய் வாழாமல்
உண்ணமுது கலையோடு மிழந்துவெறுமட்
கலத்திடு புதுக்கூ ழினுக்கிரவு
பூண்டோரு களங்கம்வைத் தாயிதுவலால்
ஒளிதூங்கு தெளிவிசும் பினினின்னோ
டோத்தவ னோருத்தன் கரத்தின்வாரி
உண்டோதுக் கியமிச்சில் நள்ளிருளில்
அள்ளியுண் டோடுகின் றாயென்செய்தாய்
அளிதூங்கு ஞிமிறெழுந் தார்க்குங்
குழற்றிருவோ டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீ யாடவாவே 70

துளித்தலைக் கொண்ட தெள்ளமுதமாகிய வெள்ளருவி பொழிகின்ற உனது பழைய மரபு தழையும்படி வந்து தோன்றிய பாண்டியர் குலக் கொழுந்தாகிய மீனாட்சி யம்மையைக் கண்டு இரு கண்களும் உள்ளமும் களிப்படையும்படி அளவளாவி வாழாமல் உண்ணுகின்ற சோற்றைக் கூறையோடும் இழந்து சிறுமியர் வெறுமண் கலத்திலிடுகின்ற நிலாச் சோறாகிய புது

உணவுக்கு யாசித்து ஒரு களங்கத்தை வைத்தாய். இதுவல்லாமல் ஒளியையுடைய தெளிந்த வானத்தில் உன்னேடொத்த கையினல் வாரியுண்டொதுக்கிய மிச்சிலை நடு இரவில் அள்ளி உண்டு ஓடுகின்ருய். என்ன காரியம் செய்கின்ருய்! தூங்குகிற வண்டுகள் எழுந்து பாடுகிற கூந்தலையுடைய அழகியோடு சந்திரனே! விளையாட வருவாயாக. ஆணிப் பொன்னுலாகிய மேருமலை வில்லியான சிவபெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்க வல்லியோடு சந்திரனே! விளையாட வருவாயாக.

மழைக்கோந் தளக்கோதை வம்மினென்
றளவினில் வந்திலை யெனக்கடுகலும்
வாண்முகச் சேவ்விக் குடைந்தோதுங்
கினவனெதிர் வரவோல்கி யோபணிகள்கோ
ளிழைக்குங்கோல் பின்ருேடர்ந் தேனவஞ்சி
யோதாழ்த் திருந்தனன் போலுமேனயாம்
இத்துணையு மோருவாறு தப்புவித்
தோம்வேகுளி னினியோரு பிழைப்பில்லைகாண்
தழைக்குந் துகிற்கோடி முகிற்கோடி
திரைத்துமேற் றலம்வளர் நகிற்கோடிகளைத்
தாழ்குழலு நீவிநுதல் வேயர்வுந்
துடைத்தம்மை சமயமிது வேன்றலுவலிட்
டழைக்குந் தடம்புரிசை மதுரைத்
துரைப்பேணுட னம்புலீ யாடவாவே
ஆணிப்போன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீ யாடவாவே. –71

மேகம் போன்ற கற்றையாகிய கூந்தலையுடைய அம்மை உன்னை வாவென்றழைத்தவுடன் நீ வரவில்லை; என்று கோபிக்க உனது ஒள்ளிய முகத்தின் அழகுக்குத் தோற்று ஒதுங்கியவன் எதிரே வர நடுங்கியோ? பாம்புகள் பின் தொடர்ந்து வந்து துன்பஞ் செய்யுமென அஞ்சியோ? தாழ்த்திருந்தான் போலுமென நாங்கள் இதுகாறும் உன்னைப் பிழைப்பித்தோம். இனியும் கோபித்தாளானல் உனக்குப் பிழைப்பில்லை. தழைக்கின்ற கொடியிலுள்ள துணிகள் மேகத்து மின்கொடிகளை ஒரு பக்கத்தில் ஒதுக்கி விண்ணுலகத்தில் வாழுகின்ற கொங்கைகளையுடைய

கொடிபோன்ற பெண்களது நீண்ட கூந்தலைக் கோதி நெற்றி வெயர்வையையும் துடைத்து அம்மையை வணங்குதற்குரிய வேளையிதுவென்று ஓசையிட்டழைக்கின்ற பெரிய மதிலையுடைய மதுரைப் பெருந்தேவியோடு சந்திரனே! விளையாட வருவாயாக. ஆணிப்பொன்னாலாகிய மேருமலை வில்லியான சிவபெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்கவல்லியோடு சந்திரனே! விளையாட வருவாயாக.

ஏடகத் தெழுதாத வேதச்
சிரத்தர சிருக்குமிவள் சீறடிகணின்
இதயத் தடத்தும் பொலிந்ததவா
திருவுளத் தெண்ணியன் றேகபடமா
நாடகத் தைந்தொழில் நடிக்கும்
பிரான்றெய்வ நதியோடு முடித்தல் பெற்ருய்
நங்கையிவள் திருவுள மகிழ்ச்சிபெறில்
இதுபோலோர் நற்றவப் பேறில்லைகாண்
மாடகக் கடைதிரித் தின்னரம்
பார்த்துகிர் வடிம்புதை வருமங்கலார்
மகரயாழ் மழலைக்கு மரவங்க
றுண்டுகில் வழங்கக் கொழுங்கொங்குதூங்
காடகப் பொற்கிழி யவிழ்குமது
ரைத்திருவோ டம்புலீ யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க
வல்லியுட னம்புலீ யாடவாவே. – 72

எட்டில் எழுதப்பெருத வேதத்தின் உச்சியில் அரசிருக்கும் இவளது சிறிய பாதங்கள் உனது உள்ளத் தடத்திலும் விளங்கு வதை அவர் திருவுளங்கொண்டல்லவா; கபட நாடகத்தால் ஐந் தொழில்களைச் செய்கின்ற பெருமான் தனது சடையில் கங்கை யாற்ருேடு முடித்துக்கொள்ளப் பெற்ருய். ஒப்பற்ற பெண் ணரசியாகிய சிவனது திருவுள்ளமும் மகிழ்ச்சியடையப் பெறுவா யானல் இதுபோல நற்றவப்பேறு வேறு உனக்கு இல்லை. முறுக்காணியின் கடையைத் திரித்து இனிய நரம்பை இழுத்து

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

மகா மகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதையர்

நினைவுநாள் வாழ்த்து

1 உத்தமன் அந்தணன் உத்தம கானத்தன் ஒப்பிறந்த
முத்தமிழ் நூல்கள் முறையா னறிந்தநல் மூதறிஞன்
சத்தியோர் பாகன் அடிமற வாதவன் சற்குணத்தன்
சுத்தன் உயர்திரு சாமி நாதப் பெயர்த் தோன்றலன்றே.

2 பார்த்தான் தமிழ்மான் நிலைகெட்டு நின்ற பரிபவத்தை
வேர்த்தான் உடலகம் விம்மி நின்றான்பல வேடுகளைச்
சேர்த்தான் அவற்றைத் திருத்திப் புலவர் திரட்குதவி
ஆர்த்தான் அவன்யார் உயர்சாமி நாதநல் ஆண்டகையே.

3 எண்டிக் கினுஞ்சேலும் சீர்த்தியள் செந்தமிழ் ஏந்திழையாம்
பெண்டவள் நூபுரம் சிந்தாமணியோடு பெய்வளையும்
குண்டலமுங் கோண் டறிஞர் அகத்துலாக் கோண்டருளத்
தோண்டுகள் ஆற்றினன் சீர்ச்சாமிநாத சுகுணனம்மா.

4 ஆசை புலத்தில் இவைக்கு முண்டோ வேன ஐயமுற்றுப்
பேசப் பலவாக மோய்த்திட்ட செல்லைப் பிரித்தழித்து
மாசை யகற்றிப் பிரதிகள் தம்மை வகைப்படுத்தித்
தேசத்திற் கீந்தவன் வண்சாமி நாதநற் றேசிகனே.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நகவடிம்பினல் வருடுகின்ற பெண்களது மகர யாழிசையாகிய மழலைக்குக் குங்கும மரங்கள் செம்பட்டை யொத்த தமது பட்டையாகிய ஆடையை வழங்கக் கோங்க மரங்கள் தம்மிடத்துத் தொங்கு கின்ற பொன்மயமாகிய பூம்பொற் கிழியை விரிக்கின்ற மதுரைச் செல்வியோடு சந்திரனே! விளையாட வருவாயாக. ஆணிப் பொன்னுலாகிய மேருமலை வில்லியான சிவ பெருமானைக் கலந்திருக்கின்ற மாணிக்க வல்லியோடு சந்திரனே; விளையாட வருவாயாக.

(தொடரும்)

5 காசறு சங்கப் பனுவலும் கோவையும் காப்பியமும்
மாசறு நால்வர் பகர்ந்ததே வாரமும் வாசகமும்
ஆசறக் கற்றேன் அவற்றைப் பிறருக் கறிவுறுத்த
தேசன் உயர்சாமி நாதன் அவனை நினைகுவமே.

6 செல்லும் சிதலும் அரித்து முனைசிதைந்து கிடந்த ஏடுகளை
அல்லும் பகலும் உழைத்துடலம் அமைத்துத்திருத்தி அச்சேற்றி
நல்கிப் புவிக்குப் புகழ்பெற்ற நல்லோன் சாமி நாதனெனச்
சொல்லும் உலகம் அவன் புகழைச் சொல்லிச் சொல்லித்
துதிப்போமே.

7 ஓதும் திறத்தை உரைத்திடுகோ
வுணர்த்தும் வன்மைதனைப் புகல்கோ
தீதில் பதிப்புத் திறமு முறை
தீட்டும் வணமும் செப்பிடுகோ
கோதில் தமிழ்த்தாய் தலைநிமிர்த்திக்
கொள்ளப் புரிந்த வண்சாமி
நாத வுனது பெருமைகளில்
எதனை யெடுத்து நவிற்றுவதே.

20. ஆணிக்காரன் தெரு
சிதம்பரம்
21—2—1960.

E. S. வரதராஜய்யர், B. A.,
அண்ணாமலைப் பல்கலைக் கழக
முன்னாட்டமிழ்ப் பேராசிரியர்.

வாழ்க்கைத் துணைநலம்

திரு. கை. சுப்பிரமணியன் அவர்கள்,
வித்துவான் முதனிலை, செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

மனிதனுக்கே உரிய பொறிகளை ஐவகையாகப் பகுத்துள்ளனர் நமது சான்றோர்கள். அந்த ஐம்பொறிகளாவன மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும். இந்த ஐம்பொறிகளிலும் மிகவும் முக்கியமானது கண் ஒன்றேயாம். இந்தவிதமான முக்கியத்தை அறிந்துதான் 'தஞ்சை வாணன் கோவை' ஆசிரியர் பொய்யாமொழிப் புலவர் "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே" என்று கூறிப்போந்தார். அப்படிப்பட்ட அரிய உறுப்பாகிய கண்ணைப் பெற்றுள்ள மனிதனின் இல் வாழ்க்கையை நோக்கும்போது அவன் அக்கண்களில் ஒரு கண்ணாகத் தானும், மற்றொரு கண்ணாகத் தனது இல்லத் தலைவியுமாக விளங்குகின்றான். மனிதனின் மாணிக்கமாகிய பெண்ணின் கடமைகளை - செயல் முறைகளை - திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளார். அதை நாம் ஒரு சிறிது நோக்குவோம்.

வாழ்க்கைத் துணைவியானவள் தன்னிடம் பற்றற்று நடப்பவர்களிடமும் தான் பற்று கொண்டு பேண வேண்டுதலும், வருகின்ற விருந்தினர்கட்கு அறுசுவை உணவளித்தலும், வறுமை எய்தியவர்கள் மாட்டு அருளுடைமை முதலாகிய மனையறத்திற்கு வேண்டிய நற்செயல்களை உடையவளாக இருக்க வேண்டும். மேலும் வருவாய்க்கேற்ற பொருள்களை முன் கூட்டியே சேகரித்தலும், அட்டிற் தொழிலில் கைதேர்ந்தவளாகவும் இருக்க வேண்டும்.

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை." (குறள் 51)

ஆகவே இவை போன்ற நற்குணங்களை உடைய மனைவியே சிறந்த வாழ்க்கைத் துணையாகும்.

ஒருவனின் இல்லக்கிழத்தியானவள் எவ்வளவோ செல்வம் இருந்தவளாக இருப்பினும்பயனில்லை. ஆனால் அவள் யாவரிடமும் இரக்கக் குணம் முதலாகிய நற்குண நற்செயல்களை உடைய வளாக இருக்கவேண்டும். செல்வமாயின் இன்றோ, நாளையோ என்றோ ஈட்டிக் கொண்டு விடலாம்; அப்படியே பொருள் முன்பு ஈட்டிவைத்திருந்த போதிலும் அழிவதும் உண்டு. இந்த வித அழிவுகள் செல்வத்திற்கு உண்டு என்பதை அறிந்த வள்ளுவப் பெருந்தகை அதை ஒழித்து நற்குண நற்செயல்கள் வேண்டுமென்று எண்ணி,

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" (குறள் 52)

என்று மிகவும் நயம்பட உரைத்தார்.

இப்படிப்பட்ட அருங்குணங்களை உடையவளை ஒருவன் வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றுவிட்டால், அவன் இனிப்பெற வேண்டிய செல்வமோ, அன்றி வேறுபிற வசதிகளோ எதற்கு? இதுமட்டும் போதுமன்றோ! இஃதுமட்டும் இருந்து விட்டால் மற்றைய துணைவசதிகள் எல்லாம் இவன் இல்லம் நோக்கி வழி வினவி வந்து சேரும். அன்றி அவனுடைய மனைவியே நற் பண்புகள் வாய்க்கப் பெறாவிட்டால்? கேட்க வேண்டியதில்லை! மூத்தவளான மூதேவி அவன் இல்லம் நோக்கி வந்து சேர்ந்து விடுவாள்!

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை". (குறள் 53)

நல்ல வாழ்க்கைத்துணைவி கிடைப்பது அவன்செய்த பெரும் பாக்கியம் அன்றோ!

கற்பென்னும் அணிகலன் என்பது பெண்ணிற்கே உரிய அணிகலன்களுள் மிகவும் மேம்பட்டதாகும். அப்படிப்பட்ட

அந்த அரிய ஆபரணத்தைப் பூண்ட நங்கை நல்லாளை அடையப் பெற்றால் அதைவிட அரியபொருள் என்ன உலகில் இருக்கிறது? விண்ணக வாழ்க்கையும், இந்திர பதவியும், கைலாய பதவியும், வைகுண்ட பதவியும் எதற்கு என்று கேட்பவர்போல் திருவள்ளுவர்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்" (குறள் 54)

என்று அழகாகக் கூறியுள்ளார்.

மதுரைமா நகரைத் தீக்கொளுவிய கற்புக்கோர் தெய்வமாகிய கண்ணகி தன் கணவனைத்தவிர வேறு தெய்வங்களை வணங்கினாளா? இல்லை! தன் தோழி தேவந்தி காமனது கோவிலுக்குச் செல்வோம்' என்றுகூறிய ஞான்று, "பெண்கள் கணவனைத் தொழுவது தவிர, வேறு எந்தத் தெய்வத்தையும் தொழுவது முறையல்ல என்று கூறியுள்ளாள். இதைத்தான் நமது வள்ளுவப் பெருந்தகை," பெண்கள் கணவனைமட்டும்தான் தொழவேண்டும். அன்றி வேறு எந்தத் தெய்வத்தையும் தொழுதல் முறையன்று" என்று குறிக்கின்றார். அப்படி கொழுநனை தினம் தொழுபவள் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாக நடந்துவிடும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள் 55)

என், இக்குறளை சிலப்பதிகார கண்ணகி மெய்ப்பிக்கவில்லையா?

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து" (சிலப்பதிகாரம்)

என்று சிலம்பு கூறுகிறது.

பெண்ணொன்று பிறந்து வளர்ந்து விட்டாலும் அவளை ஊரார், "இவள் மிக்க கற்புடையவள்" என்று கூறுமாறு தான் கற்பினின்றும் வழுவாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் தன்கணவனை எந்தச் சமயத்திலும், எப்போது வந்தாலும்

அவனை இன்முகத்தோடு வரவேற்க வேண்டும். வரவேற்றதும் உண்டி, உடை முதலிய உபசாரங்கள் செய்து, அவனை நன் முறையில் செவ்வனே பாதுகாக்க வேண்டும். இதோடு மட்டு மன்றித் தன்னுடைய சொல்வன்மையால் நன்மை அமைந்த, புகழ்நீங்காமல் பாதுகாக்க வேண்டும். இப்படிப்பட்ட நற் பண்புகளை உடையவளைத் தான் திருவள்ளுவர் பெண்ணென்று கூறியுள்ளார். அப்பாடல்;

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள் 56)

மனிதர்கள் தங்களுடைய மாதர்களைப் பிறர்யாரும் பார்த்து விடாதபடி அவளை சிறையில் வைப்பதுபோல் வைப்பதில் பயன் ஒன்றுமில்லை. ஆனுல் அந்த மங்கையானவள் ஊரார் அலர் தூற்ருமல், புகழ்தற் பொருட்டு, தன்னைக் கற்பு நெறியாகிய காவலில் வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் மேம்பட்ட காவல் செய்யும் தொழிலாகும்.

"சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (குறள் 57)

அப்படிக் காத்துக் கொள்வதுதான் நிறைகாக்கும் காப்பாகும்.

உலகங்களிலே மிகவும் சிறப்புடையது புத்தேளிர் உலகமாகிய தேவர் உலகமாகும். அந்த உலகத்தை யாரும் எளிதில் எய்தி விடலாம் என்று நினைப்பது மிகவும் கடினம். ஏன்? எய்து வதற்கே முடியாது! ஆனுல் அப்படிப்பட்ட அந்தப் புத்தேளிர் உலகத்தை அடைவதற்கும் வழிவகுக்கிருர்வள்ளுவர். எப்படி? தன் கணவனை வழிபடுதலிற் சிறிதும் குறைவில்லாத மங்கை புத்தேளிர் உலகத்தை அடைந்து விடுவாள் என்று கூறுகின்ருர்.

"பெற்ருற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
புத்தேளிர் வாழு முலகு" (குறள் 58)

என்ற குறட்பா இதை நன்கு விளக்கும்.

எந்தவித மனிதனும் தன்னைப் பெருமை அடித்துக்கொள் வதில் தயங்குவதில்லை. மேலும் தன் பகைவன் சென்ருலுயின்

பெருநடை போட்டு, கம்பீரமாக, அவனுக்குத் தெரியும்படி நடந்துசெல்ல ஆசைப்படுவான். அந்த நடை எப்போது வரும் என்ருல், யாவரும் நன்கு மதிக்கத்தக்க வாழ்க்கைத் துணைநலம் பெற்ற போதுதான். அப்படிப் பெற்ருல்தான் தன்னை இகழ் வாரின் முன்பு ஏறுபோல் நடக்கமுடியும்.

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ணேறுபோற் பீடு நடை" (குறள் 59)

இறுதியில் வாழ்க்கைத் துணைவியர்களுக்கு மிகவும் முக்கிய மானது மக்கட் பேறு. அப்படிப்பட்ட நல்லணிகளான நன் மக்களைப் பெறுவதுதான் மங்கலமான மனைமாட்சி. இதனுல் அன்ருே வள்ளுவனர் 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தையே தனியாக வகுத்துள்ளார். ஈண்டு மக்கள் என்பது ஆண் மக்களை மட்டுமன்று. அதனேடு இயைபுடைய பெண்மக்களையும் சேர்த்து தான் வள்ளுவனர் 'மக்கள்' என்னும் பொதுச் சொல்லால் கூறினர்.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு" (குறள் 60)

என்பதாகும்.

இந்த உண்மையை உணர்ந்துதான் பாண்டியன் அறிவுடை நம்பி என்பவன், "நாம் படைத்துள்ள செல்வங்களிலெல்லாம் தலை சிறந்தது மக்கட் செல்வம். அது கிடைக்கப் பெருதவருக்கு வாழ்வு பயனின்றிப் போய்விடும் என்று கூறியுள்ளார். அப் பாடல்,

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழும் நாளே" (புறம், 188)

ஆகவே கூறிய செவ்விய வாழ்க்கைத் துணைவியை உடைய வனே மனிதருள் மேம்பட்டவனுய் இப்புவியில் ஒளிவிடுவான்.

கண்டேன்! கண்டேன்!!

"பூங்குன்றன்"

1 காலைக்கதிர் கோலக்கவின் கண்டே மலரும்
காசினியின் மாசிலெழில் கமலந் தானே!
மாலைக்குளிர் பாலைவெலும் மதியங் கண்டே
மாக்கவலை தேக்கியிதழ் மடியு மன்றே!
சோலைக்குளே நீலமுகில் கண்டே நிற்கும்
சூழிதழ்கள் நீளுவகை அல்லி கண்டேன்!
நீலக்கடல் நெஞ்சுவந்தே நடன மாடும்!
நீளியற்கைக் கோலமெல்லாம் நீயே யன்றே?

2 கோலமயில் வானமுகில் கண்டே ஆடும்!
கூர்விழிமான் நீள்மருட்சி கொண்டே ஓடும்!
சோலைவளம் கானக்குயில் உண்டே பாடும்!
சூழும்வண்டு யாழிஞெலி செய்தே யேங்கும்
காலையெழில் காணவிரி மலர்கள் நாடும்!
காசினியிற் காணும்விந்தைப் பொருளிலெல்லாம்
நீலவுடல் மேலவன்நீ நிற்கக் கண்டேன்!
நீளியற்கைக் கோலமெல்லாம் நீயே யன்றே?

3 பொய்யுமில்லை, புன்மையெண்ணம் சிறிது மில்லை!
பொலிவுகொண்ட உளத்துடனே பூரிப் பெய்தி,
மெய்யிலெல்லாம் மண்ணைப்பூசி மெல்லத் தத்தி,
மென்னடையும் பழகிச்செலும் மேன்மைகொண்டு,
வெய்யவனின் வரவுகண்ட முளரி யொப்ப
விதவிதமாய் நகைத்துமனம் விரும்பி நிற்கும்
வையமெல்லாம் வாழ்த்திக்கூறும் குழந்தைகண்டேன்!
வடிவதனில் நீவதியக் கண்டேன்! கண்டேன்!!

4 களங்கவிருள் கலங்கிச்செலும் கதிரோன் காணின்!
காதலரின் போதையுளம் களிக்கத் தோன்றும்,
உளங்கவரும் நலங்கள்தரும் மதியைக் கண்டேன்!
உன்னதமாய்ப் புன்னகைக்கும் வான்மீன் வரிசை
பளிங்கெனவே இலங்கியொளி பரப்பக் கண்டேன்!
பங்கமிலா எங்குந்நிறை பண்புப் பொருளாய்
விளங்குமுனில் இவற்றையெலாம் விஞ்சி நின்று
வீசுமருள் மாசிலெழில் விளங்கு மன்றே!

5 அடியாரை மிடிதீர அருளாற் காக்கும்
அனைத்துமாவோய்! நினைத்துணையாய் அடைந்தோ
கொடியாரின் குணங்கொண்டு நிற்கக் காணேன்! [ரெல்லாம்
கொடைமுதலே! பொறைமுதலே! ஒன்று சொல்
கடையாரே, இடரோட்டுங் கடவுள் நின்னில் [வேன்:
கதைகள்கட்டி, வகைகள்சுட்டி, மதங்கள்சொல்லி,
புடைசூழ இடையூறு புரிவோர் தாமே!
புன்மைபல உன்பெயராற் புரிதல் நன்றே?

6 நிலமாந்தர் நினையாது நெறிபி றழ்ந்து,
நெடுந்துயர்கள் நிரைநிரையாய் நிற்பக் கண்டே
நிலைதாழ்ந்து விழிசோர்ந்து நினைவர் நின்னை!
நினைவுசென்ற நெறியிலெல்லாம் நின்ற பின்னர்,
தலைதாழ்ந்து மனம்நாண தம்தாழ் வோர்வர்!
தாழ்வுகண்டு நாணிநிற்போர் தமைப்போ றுத்தே
நிலையாக்கும் நிலைநின்றன் நிலைத்த அன்பை
நினையாதார் உலகிலுண்டோ, நெஞ்சில் நித்தம்?

கடிதம் எழுவது எப்படி?

திரு. பொன் முருகையன் அவர்கள்,
செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்,

உலகில் வாழும் நாம் ஒருவர் ஒருவருடைய சுகதுக்கங்களை நேரில் கண்டறிதல் உண்டு. முடியாத நிலையில் எழுத்து மூலம் தெரிந்து கொள்ளுதல் முறை. இம்முறை அஞ்சல் முறை என்று வழங்கப்படும். போக்கு வரவு வசதிகள் பெருகிய இக் காலத்தில் அஞ்சல் முறை சிறந்து விளங்குகிறது. முகமதியர்கள் ஆட்சியில்தான் தபால் முறை முதன் முதல் ஆரம்பிக்கப் பட்டதாக இந்திய சரித்திரம் கூறுகிறது. இருப்பினும் இந்த முறை தொன்று தொட்டு நம் தமிழகத்தில் சிறந்து விளங்கி வருகின்றது.

நாகரீகம் மிகுந்த இக்காலத்தில் காகிதத்தில் எழுதும் முறை விளங்கி வருகின்றது. பண்டை நாளில் ஓலைகளில்தான் எழுதி வந்தார்கள். ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதி, அவ் வோலையை ஒருவர் மூலம் கொடுத்து அனுப்பும் பழக்கம் அக்காலத்தில் இருந்து வந்தது. பிற்காலத்தில் குதிரைச் சேவகர்கள் எடுத்துச் செல்லும் வழக்கம் இருந்தது. இக்காலத் தில் துரிதவண்டிகள் அக்கடமையை விரைவில் செய்கின்றன.

கடிதத்தைக் குறிக்கும் வேறு சொற்கள்:

கடிதம் என்று நாம் வழங்கும் சொல்லை அக்காலத்தில் திருமுகம் என்று வழங்கினர். இது பெரும்பாலும் உயர்ந்த அரசாங்கத்திலிருந்தும், அரசகுடும்பங்களிலிருந்தும் ஏனையோருக் கும் செல்லும் தபால் ஆகும். ஒரு அரசன் மற்ற அரசனுக்கு அனுப்பும் செய்திகளும் இப்பெயர் பெறும். தொடக்கத்தில் ஓலை என்ற சொல்லே வழங்கி வந்தது. பின்னர் வேறுபாடு குறிப்ப

தற்காக நற்காரியங்கள் பற்றிச் செல்லும் ஓலை திருமுகம் என்றும் தீயகாரியங்கள் பற்றிச் செல்லும் ஓலை அவ்வப்பெயர் பற்றியும் (சாவோலை இழவோலை) எனவும் வழங்கலாயின. அன்றியும் தபாலைக்குறிக்கும் முடங்கல், லிகிதம், மடல் முதலிய சொற்களும் இக்காலத்தில் வழங்கிவருகின்றன. ஆங்கில மொழியில் Letter என்றும் வழங்குகின்றது.

நம்முடைய சைவ சமய நூல்களிலும் புராணங்களிலும் இச் சொல் (திருமுகம்) பல இடங்களிலும் பரந்து கிடப்பதைக் காண லாம். திருவிளையாடற்புராணத்தில் 42 வது படலம் இறைவன் பாணபத்திரனுக்குத் திருமுகம் கொடுத்த வரலாற்றைக் குறிப்ப தாகும். தன்னிடத்து அன்பு கொண்ட பாணபத்திரனுக்குப் பொருள் கொடுக்கும்படியாக இறைவன் எழுதிக்கொடுத்த திருமுகப்பாசுரம் 11ம் திருமுறையில் உள்ளது. சேரமான் பெருமாள் நாயனருக்கு எழுதப்பட்ட கடிதம் அது.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்

உலகத்தில் எதையும் சுருங்கச் சொல்லி தான் கருதிய பொருள் பிறருக்கு விளங்குமாறு செய்தல் வேண்டும். வீணாக சொற்களைக் கோவைப்படுத்துவதில் பயன் கிடையாது. மேற் கூறப்பட்ட பாடலில் அங்ஙனம் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறை காணப்படுகிறது.

கடிதத்தின் அமைப்புகள்:

பொதுவாக கடிதம் எழுதவேண்டுமானல் சிலவற்றை உற்று நோக்க வேண்டும். கடிதம் எழுதுவோர், கடிதத்தைப் பெறுவோர், கடிதத்தில் அடங்கிய செய்தி என மூவகையாகப் பிரிக்கலாம். இம்முறை இக்காலத்தில் பயன்படுவது அரசியல் வேலைகளுக்கு மனுப்போடும் இடங்களில்தான். மற்ற அஞ்சல் முறைகளில் மேற்கண்ட முறை அனுப்புவோர், செய்தி, பெறு வோர் என மாறிவிட்டது. இறைவன் பாணபத்திரனுக்குக் கொடுத்த திருமுகப்பாசுரத்தில் மும்முறை சிறப்பாக அமைந் துள்ளது. அப்பாடல் வருமாறு:–

அனுப்புவோர் முகவரி	“மதிமலி புரிசை மாடக்கூடல் பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு அன்னம் பயில்பொழில் ஆல வாயில் மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்”
பெறுவோர் முகவரி	பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ் குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச் செருமா வுகைக்கும் சேரலன் காண்க.
செய்தி விளக்கம்	பண்பால் யாழ்பயில் பாண பத்திரன் தன்போல் என்பால் அன்பன் தன்பால் காண்பது கருதிப் போந்தனன் மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

அனுப்புவோர் முகவரி:- இறைவன்
ஆலவாய்
கூடல்நகர்

பெறுவோர் முகவரி:- சேரமான்
கொடைமன்னன்
சேரநாடு

செய்தி விளக்கம்:- சிறந்த பொருளை பாணனுக்குக்
கொடுத்து விரைந்து அனுப்புதல்.

பன்னிரண்டு வரிகளில் தான் கருதிய செயல்களையெல்லாம் பெய்து விட்டார் இறைவன். அனுப்புவோரைப் பற்றி நான்கு வரி, பெறுவோரைப்பற்றி நான்கு வரி, சொல்ல வேண்டிய செய்தியைப்பற்றி நான்கு வரி—எவ்வளவு செய்திச் சுருக்கம். ஆனல் பயனே உயர்ந்த அளவில் பொன்னும் மணியும் கொடுத்து பாணபத்திரனை அனுப்பி வைத்தார் சேரமான்.

எனவே பிறருக்கு செய்திகளை அனுப்பும் அஞ்சல்கள் சுருங்கிய முறையில் விளங்கும் வகையில் இருத்தல் வேண்டும். இக்கருத்தைப் பரஞ்சோதியார் திருமுகப்பாசுரத்தின் மூலம் தெளிவுபடுத்தி விட்டார். இன்னும் திருவிளையாடல் புராணத்தில் மாணிக்கத்தின் இலக்கணம், குதிரையின் இலக்கணம், ஏழிசை களின் இலக்கணம், வில்லில் அம்பை வைத்து குறிபார்க்கும் இலக் கணம், போர்முறை இலக்கணம் ஆகியவற்றை யெல்லாம்விளக்கி யிருக்கிறுர் பரஞ்சோதியார். புராணம் என்று ஒதுக்கும் பலர் இவற்றைக் கண்டிலரோ?

THIRUKKOVAIYAR OR LOVE'S PROGRESS
BY
SAINT MANICKAVASAGAR

Professor Thiru G. Subramania Pillai Avergal, M. A., B. L.,
Annamalainagar.

(மலர் 11, இதழ் 3-ன் தொடர்ச்சி)

20. பாங்கன் வினாதல்

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல்புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென் கொலாம்புகுந் தெய்தியதே.

[The Companion Questions the Hero-When the love-lorn and jaded Hero approached his Companion, the latter spied him from head to foot and finding him very much emaciated, jocularly asks him whether he has taken to Tamil studies or deeply absorbed in music to be thus reduced in physique.]

"Into the field of Tamil poetry
Sublime and sweet, scanned at high-walled* Kudal
By the God, Who at once dwells in my heart
And at Chirrambalam of Thillai where
Water's embanked, have you made your entry?
Or in the notes of music four and three,
my lord! have you been so lately inclined
That your mount-like shoulders are thus declined?"

(Spiritual Allegory-The Soul communes with its Mind by a process of ratiocination and is distressed in perplexity.

* Kudal=Madurai.

(to be continued)

இலக்கிய வளம்

(திருவாசகம்)

திரு. ப. முத்துக்குமாரசாமி அவர்கள்,
"இளங்கோ இல்லம்" திருப்பராய்த்துறை.

தமிழ் நாட்டிலே தொன்றுதொட்டு பல அறம் விழுமிய அறவோர்களால் எண்ணற்ற இலக்கியங்கள் வளர்ந்திருக்கின்றன. புறநானூறு, அகநானூறு, பத்துப் பாட்டு போன்ற புறத்துறை, அகத்துறை வகைகள் மட்டும் இலக்கியம் என்ற பகுப்பினுள் அடங்கா. தித்திக்கும் தேனூறும் தென் தமிழில் ஆண்டவனை வாயார வாழ்த்திய மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம்; நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்து, முத்திநெறி பாடிய நால்வர் பெருமக்களின் திருமுறைகள் யாவும் இலக்கியங்களே.

வாதவூரடிகளுடைய வண்ணத்தமிழ் இலக்கியமான திருவாசகத்தில் பெய்திருக்கின்ற ஒவ்வோர் எழுத்துக்களிலேயும் உயிரும் உணர்ச்சியும் உண்டு. தில்லையாண்டவன் பால் நினைந்து நினைந்து, உருகி, உயிரோட்டமுடைய சொற்களைத் தனது திருவாசகத்தில் பெய்துவைத்திருக்கின்றார். இதை விளக்குவான் போல ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்ற பேராசிரியன்.

"A word is not a crystal – transparent and unchanged; it is the skin of a living thought, and may vary greatly in Colour and Content according to the Circumstances and the time in which it is used"

—justice O. W. Homes

என்று சொன்னான். சாதாரண புலவர்கள் பாடுகின்ற பாட்டுக்கும், மாங்குடி மருதனார், கணியன் பூங்குன்றனார், மாணிக்க

வாசகர், திருமூலர் போன்ற பெருமக்கள் பாடிய பாட்டுக்கும் வேறுபாடு உண்டு. மாணிக்கவாசகர் போன்ற பாவலர்களின் பாட்டுகளிலே உயிரோட்டம் உண்டு, கருங்கல் மனதையும் கனி விக்கும் தன்மை யுண்டு, அருள்நெறி வழி வாழ அதிலே வழி யுண்டு. அத்துடன் நில்லாது வாழ்கின்ற வாழ்வுக்கு நிலைக் களனாக, சமுதாயம் அறத்தினின்று பிறழாமல், நீதிநெறி புகட்டி வாழ்வை வளப்படுத்தும் சிறப்பும் உண்டு. இலக்கியத்தின் இலக்கணத்தை விளக்கவந்த மேலைநாட்டுப் பேராசிரியன் இதே கருத்தைத் தான் உறுதிப்படுத்துகின்றான்.

"Literature is thus fundamentally an expression of life through the medium of language" —Hudson

"Literature is one of the most powerful instruments for forming character" . —V. Marly.

எனவே திருவாசகத்திலே மேலே கூறப்பட்ட இலக்கியத்தின் இலக்கணங்கள் அத்தனையும் உண்டு. முத்திநெறி பாடும் முழுப் பெரும் இலக்கியங்களிலே தலை சிறந்தது திருவாசகம். நாட்டால், மொழியால், இனத்தால் வேறுபட்ட ஜி. யு. போப் அவர்களை ஈர்த்து, உள்ளம் உருகி, திருவாசகத்திற்காகத் தமிழ்க்கற்று, வாழ்விலே குறைவு இலாத செல்வங்கள் பெற்று, இறக்கின்ற போது, தனது கல்லறையின்மேல் "இங்கு ஓர் தமிழ் மாணவன் புதைக்கப்பட்டிருக்கின்றான்" என்று வேண்டிக் கொள்ளும்படி செய்தது திருவாசகம். துறையூர் சிவப்பிரகாச சுவாமிகள் திரு வாசகத்தில் தோய்ந்து தான்பெற்ற அனுபவத்தை இதோ வெளி யிடுகின்றார்.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர் வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்தது என்கு வீராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்ச நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்

கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடு மணற் கேணியிற் சுரந்து நீர் பாய
மெய்ம் மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப் பெய்தி
யன்ப ராகு நரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"

—நால்வர் நான்மணிமாலை 4

என்றும்; வடலூர் வள்ளலார் தனது அருட்பாவிலே தான் மணிவாசகத்தால் பெற்ற பெரும் பேற்றை

"வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித்தீம் சுவைகலந்து-என்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

—அருட்பா

என்று கூறியுள்ளார்.

வள்ளலாரும், சிவப்பிரகாசரும், மேலைநாட்டு போப் போன்ற பெருமக்களும் திருவாசகத்திலே உள்ளம் தோய்ந்து, ஒருமித்து, ஒத்த உணர்ச்சிப் பெருக்கில் உந்தப்பட்டு வாழ்ந்த தற்குக் காரணம் திருவாசகத்திலே உயிரோட்டம் கொடுக்கக் கூடிய; உள்ளத்தை உருக்கக் கூடிய திறன் இருந்தது. திருவாசகம் அறிவின் துணைகொண்டு ஆக்கப்பட்ட கவிதை அல்ல. அறிவு, அனுபவம், உணர்ச்சி இவைகள் அத்தனையும் பெய்யப் பட்டிருக்கின்றது. இதுவே தலை சிறந்த கவிதை.

இந்தக் கருத்தை எமர்சன் என்ற திறனாய்வாளன்

"The great poets are judged by the frame of mind they induce" —Emerson

என்றான். இத்தகைய தலைசிறந்த கவிதையைப் படைக்கின்ற ஆற்றல் படைத்தவர்கள் தலை சிறந்த தத்துவ ஞானிகளாகத் தான் இருக்க முடியும் என்று அறுதியிட்டு கோல்ரிட்ஜ் என்ற கவிஞன்

"No man was ever yet a great poet without being at the same time a profound philosopher"

என்றான். உண்மையிலேயே மாணிக்க வாசகர் தத்துவ ஞானியாக இல்லாதிருந்தால் அவருடைய மணிவாசகத்தை ஆண்டவன் எழுதியிருக்கமாட்டான். சிவப்பிரகாச சுவாமிகள், வள்ளலார்; போப் போன்ற சான்றோர்களுடைய உள்ளத்தை உருக்கியிருக்காது. எனவே திருவாசகம் ஓர் தலை சிறந்த அறிநெறி போற்றும் இலக்கியம். நம்மை யெல்லாம் நல்வழி காட்டி தலை சிறந்த குடிமகனாக ஆக்கும் வல்லமை திருவாசகத்திற்கு உண்டு.

"அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்யான்"

"…. …. …. …. …. நாய் உடலகத்தே
குரம்பை கோண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளை தோறும் ஏற்றினன் உருகுவ"

—திருவண்டப் பகுதி 173 – 175

"விச்சைதான் இது ஒப்பதுண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார் தம் அடியனுக்கி
அச்சந்தீர்த் தாட்கொண்டான் அமுதமுறி
அகளுகவே புகுந்தாண்டான் அன்புகூர"

—சதகம் 29

என அப்பெருந்தகை பெற்ற இன்பப் பெருக்கை யாரோ பெற முடியும். எனவே திருவாசகம் ஓர் தலைசிறந்த இலக்கியம்.

வளருகின்ற வாழ்க்கைக்கு குறிக்கோள் மிக மிக இன்றியமையாதது. குறிக்கோள் இன்றி, வாழ்வின் வளர்ச்சிக்கு வித்தாக ஓர் இலக்கு இன்றி வாழ்வது தவறுடைத்து. அப்படி வாழ்வது ஆறறிவு படைத்தமைக்கு பெரும் இழுக்காகும். எனவே இன்ன முறையில், நல்லன நவின்று, அதன் வண்ணம் பயின்று, நீயென நினையாது வாழவேண்டுமென நமது முன்னோர்கள் அருளிச் சென்றுள்ளார்கள். அதனாலன்றோ தமிழிலே இலக்கணம் வகுத்துக் கொடுத்த ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியன் தனது தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்று நில்லாது பொருளதிகாரம் வேறு வகுத்தான். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்" என்று திருக்குறள் கூறுகின்றது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் இறைத்தன்மையைப் பெற்ற வன். அவனை வையகம் தெய்வத்தோடு ஒன்ருக வைக்கும் என்று திருவள்ளுவர் கூறுகின்ருர். வாழ்க்கையிலே ஒன்ருக இணைந்து, நீதி, நேர்மை, அறம் போன்ற அறப்பெரும் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு, இன்பத்தோடு வாழ்ந்து, பின் விலகி வீடு பெறும் வேட்கை வழி நின்று இறைவன் திருவடியைப் பெற முயன்று வாழும் வாழ்வே திருவள்ளுவர் கூறிய வாழ்வு, "வீடு" என்பது தொல்லைகள் இல்லாது உலகத் துன்பங்களிலேயிருந்து விடுதலை பெற்று வாழ்கின்ற புகலிடந்தான் "வீடு" என்பது. பிறப்போடு இணைந்த தொல்லைகளை, அல்லல்களை, துன்பங்களை அறுத்து வாழ்வதே வீட்டுப் பேற்றின் கருப்பொருள். பிறப்பை நீக்க பிறப்பைத் துணையாகக் கொள்வதுதான் நமது அப்பர் அருளிய அருள்நெறி, சைவநெறி. ஆண்டவன் பால் இடையருது சிந்தனை கொண்டு அவன்பால் நம்மை ஈர்த்து வாழ்கின்ற வாழ்வே வாழ்வு. இவ்வண்ணம் அறத்தோடு பின்னிவாழாதவர்களைக் கண்டு மாணிக்கவாசகப்பெருமான்,

"வாழ்கின்ருய் வாழாத நெஞ்சமே வல்வினைப் பட்(டு)
ஆழ்கின்ருய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்ருய் கேடு (உ) னக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்ருய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே"

—திருச்சதகம்–20

என்று வையகத்திலே வாழ்கின்றவர்களுடைய வாழ்வு மணமில்லா மலர்போல, சுவைஇல்லாத கனிபோல என்று வாழ்ந்தும் அதாவது உறுப்பால், உணர்வால், உலகோருக்கு வாழ்ந்தாலும் கூட உள்ளத்தால், நெஞ்சால் பொய்யாமல் வாழஇல்லையே என வேதனைப்பட்டு பாடுகின்ருர். பிறிதோர் இடத்திலே நாம் வாழ்கின்ற இந்த பொய்யான வாழ்க்கையை தான் நினைந்து

"நாடகத்தால் உன் அடியார் போல் நான் நடித்து" என்று பாடுகின்ருர். ஆண்டவனை அடைய தலைசிறந்த வழி வழிபாடுதான். உயிர்கள் உய்ய வழி வழிபாடுதான். நாம் காதலாகி கண்ணீர் மல்கி கசிந்து உருகி ஆண்டவன் பால் நமது சிந்தையைப் பணயமாக வைத்து வழிபாடு செய்தால் நாம் உய்ய முடியும். இதைத்தான் மேலை நாட்டுத் தத்துவஞானி ஒருவன்

" Prayer is one of those religious acts
which are practised where ever
religion exists it is the instinctive
cry of the human soul to a power
that can help it in its time of need " –Galloway

என்றுன். வணங்குவதற்குத் தலை வைத்த இறைவனை; வாயார வாழ்த்துவதற்கு வாய்கொடுத்த ஆண்டவனை ஏன் வழுத்தக் கூடாது?

உள்ளத்தாலே சிந்திப்பவர்கள் உண்டு, புலன்களாலேயும் சிந்திப்பவர்களும் உண்டு. இறைவனை உள்ளத்திலே இருந்து, நெக்குநெக்குருகி நெஞ்சிலே சிந்திப்பவர்களும் உண்டு. இந்த பெறுதற்கரிய வாய்ப்பு எல்லோருக்கும் வாய்ப்பது கிடையாது. பூசலார் நாயனர் போன்ற பெருமக்களுக்கே இந்நிலை உண்டு. உள்ளத்தால் நினைந்து வாழமுடியாதவர்கள், புலன்களுக்குச் சிந்தனை ஊட்டவேண்டி பொறிகளால் செய்யும் வழிபாட்டுச் சடங்குகள் தொடங்கலாயின. பொறிகளும் புலன்களும் ஒன்று கலந்து தோய்ந்து வழிபடும் வழிபாடு தூய்மை யானதாக, அறநெறியோடு இணைந்ததாக, அனுபவமிக்கதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மாணிக்கவாசகப் பெருமான் இதை

" சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனையாட் கோண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெரும்கடலே மலையே உன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச் சுடரே இரண்டும் இலித் தனியனேற்கே "

—திருச்சதகம் 26

என்று ஆண்டவனிடம் வாதவூரடிகள் வேண்டுகின்றுர். இவ் வண்ணம் உள்ளம் தோய்ந்து ஆண்டவனை வழிபட்ட பிறகு நமக்கு காணுகின்ற காட்சி, எண்ணுகின்ற எண்ண ஆற்றல் இவைகள்யாவும் இறைவன் தோற்றமாகவே தோன்றும்.

மாணிக்கவாசகப் பெருமான் இயற்கையின் இயக்கத்தையும், இயற்கையையும் நன்கு உணர்ந்தவர். இயற்கை முழுவதும் தில்லைப் பெருமானின் காட்சியாகவே இருக்கின்றது. தான் கண்ட காட்சிகள் யாவும் நீயாக இருக்கின்றாய் என தனது திருவாசகத்தில்

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே "

—திருச்சதகம் 19

என்று பாடுகின்றார்.

" அருளோடும் அன்போடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் " —குறள்

என்பது தெய்வமறை. அருளால் அடியவரை ஆண்டவன் ஆட் கொள்கின்றான். அன்பால் அடியவர்கள் அவ்வருளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனை அடிகள் எம்பெருமான் பல இடங்களிலே,

" உன்றன் வார்கழற்கு அன்பு எனக்கு
நிரந்தரமாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே "

" கொள்ளேன் புரந்தரன்
மால் அயன் வாழ்வு குடிகெடினும் "

" வானேயும் பெறில் வேண்டேன் "

" வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும் "

" நரகம் புகினும் எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின் "

என்று வாதவூரடிகள் ஆண்டவன் திருக்கழலை வேண்டுகின்றார். எனவே மாணிக்கவாசகப் பெருமான் உள்ளத்தால் உருகி ஆண்டவனை வழுத்திய காரணத்தால்தான், வாதவூரடிகளின் வேண்டுகோளின் வண்ணம் ஆண்டவனால் நரி பரியாக்கப்

பட்டது. பரி நரியாக்கப்பட்டது. மாணிக்கவாசகருடைய அன்பு தூய்மையானது. அருளோடும் அன்போடும் இணைந்தது.

நாமும் இவ்வண்ணம் வழிபட்டால் இம்மைக்கும் மறுமைக்கும் நல்லனவே கொடுப்பான் ஆண்டவன். நற்றமிழ்வளர்த்த நாவுக்கரசுப்பெருமானைக் கடலிலேயிருந்து காப்பாற்றியவன்; நாளும் இன்னிசையால் தமிழ்வளர்த்த ஞானசம்பந்தனுக்குத் திருமுலைப்பால் கொடுத்த தென்னவர்கோன்; கண்ணப்பனை காளனின் மரணப்பிடியிலே யிருந்து காப்பாற்றிய காளத்தி நாதன் நம்மையெல்லாம் உறுதியாகக் காப்பாற்றுவான். அவன் தெய்வீகத்திருநாமம் நாளும் குறைவிலாது வாழ, அருள்நந்திப் பெருமான் திருவருளால் தமிழகம் ஒரு முனையோடு வாழ்ந்தால் நாமும் வாழ்வோம். நானிலமும் வளரும்!

ஓங்குக சைவநெறி! வளர்க அறப்பணி!

இராகம்: சங்கராபரணம் தாளம்: மிஸ்ரசாபு

பல்லவி

கவலை எதற்கு நெஞ்சமே என்றுமே
கார்த்திகேயன் தாள் தஞ்சமே சதாவும் சும்மா (கவலை)

அனுபல்லவி

பலவினையும் களைந்து பரமசுகங்கள்பெற
சிவனார் அருள்குமரன் குருபரனு மிருக்க (கவலை)

சரணங்கள்

1) மாயையின் மார்க்கத்தில் மயங்கிமடியாமல்
மனம்போன போக்கெல்லாம் விட்டுமருளாமல்
மால்மருகனைப்பாடி மயில் வாகனனைத்தேடு
கோலாகலன் கந்தன் குமரனுமிருக்கையில் (கவலை)

2) அஞ்சலி செய்துநீ ஆனந்த ரூபனை
செஞ்சேவற் கொடியோனை அம்பிகைபாலனை
அன்னைதந்தை என்று எண்ணியே நம்பியிரு
அனைத்துயிரையும் காக்கும் ஆறுமுகனுமிருக்க (கவலை)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி.

குருபூசை வாழ்த்து

திரு. E. S. வரதராஜய்யர் அவர்கள், சிதம்பரம்.

பண்ணூர் பனசை மடத்தின் தலைமை படைத் துயர்ந்தான்
கண்ணும் தமிழொடு சைவம் தழைக்கக் கன நிதியம்
விண்ணூர் தருவிற் பொழிந்தான் உயர் சைவ வித்தகனும்
தண்ணூர் அளியன் எழிற்சாமி நாத நலத்தகையே.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் வாழ்த்து

---

1) பொன்னும் கலைமகட் பூவையும் கூடிப் பொருந்தியென்றும்
மன்னும் பனசை மடத்தின் தலைமை மருவிநின்று
தன்னிக ரற்றருளிர் சைவமும் தண்டமிழ்த் தாய்மொழியும்
நன்னிலை யெய்த நிதிபெய் அருணந்தி நற்றவனே.

2) சைவத் திருவன் குமர குருபரன் தாபனமாம்
தெய்வ மடத்தின் தலைமைபெற் றூனுயர் செந்தமிழ்த்தாய்
உய்வைப் பெறச்சைவம் ஓங்கப்பெரும் பொன்உவந்தளிப்
பெய்வளை பாகற் கடியன் அருணந்திப் பேரணிபனே. [பொன்

3) வந்தான் குமர குருபரனூர்தம் வழிமரபில்
நந்தாப் புகழ்கொண்ட சைவந் தழைப்பத்தமிழ்வரை
மந்தார மென்ன நிதிபெய்யும் வள்ளல் வளர்சமுக்கைப்
பைந்தார் அரன்பதம் போற்றும் அருணந்திப் பண்டிதனே.

4) காயும் பயிர்க்குக் கருமுகில் போன்றும் கவினழிந்து
சாயும் குழவிக்குத் தாய்போன்றும் சைவம் தழைத்திடவும்
ஆயிழை செந்தமிழ் ஆதிக்கம் ஓங்கவும் ஆன்றபொருள்
ஈயும் திறத்தன் பனசை அருணந்தி யோர்தவனே.

5) புனலிற் குளித்து மணிவேய்ந்து நீறுபுனைந் துடலில்
கனலாடி பாதம் மனத்தினிற் கொண்டு கரங்குவித்துத்
தினந்தோறும் நால்வர் திருமுறை யோதும் திருவினன்காண்
பனசை யதிபன் அருணந்திப் பேர்கொண்ட பண்ணவனே.

6) தூயமுனிவன் பரமன் தனது துணைப்பதத்தை
நேயத் துடன்மனத் திற்பதிப்போன் அன்பின் நித்தநித்தம்
ஆயும் கலைகள் சிவக்கலை ஓதுவ தான்றமுறை
தேயம் புகழும் பனசை அருணந்தி தேசிகனே.

7) ஆய்வது செந்தமிழ் ஆகமம் நால்வர் அருள்மொழிகள்
காய்வ தகந்தை நினைவ திறைவன் கழலிணைகள்
ஈவது செம்பொன் தமிழோ டுயர்சைவ மேற்றமுறத்
தூயன் பனசை அருணந்திப் பேர்கொண்ட சுந்தரனே.

8) கல்லாடையுந்திரு நீறும் மணியும் கவுரிசங்கும்
வல்லான் விடையவர் ஈசன் திருத்தாள் மருவுளமும்
நல்லாளிடத்தன் பெயரை வழுத்திடும் நாவசமும்
சொல்லார் கழனிப் பனசை அருணந்தித் தோன்றலுக்கே

9) சாற்றும் பனசைத் தலமடத்தின்
தலைமை யேற்றுத் தனித்தமிழும்
போற்றும் தெய்வச் சிவநெறியும்
புகழ்பெற் றோங்கப் பொன்னுதவி
நீற்றின் சிறப்பும் சிவ பெருமான்
நேயர் சிறப்பும் சிவனருளும்
பேற்றின் சிறப்பும் விளக்கும் அருள்
நந்திப் பெயர்கொள் பெருந்தகையே.

10) ஆதி குமர குருபர னூரன் றமைத்தளித்த
கோதில் பனசை மடத்தின் தலைமை கொருதமிழும்
தீதிகல் சைவ நெறியும் தழைப்ப நிதிவழங்கும்
மாதவத் தண்ணல் அருணந்தி வாழ்க மனமகிழ்ந்தே.

அகமும் புறமும்

திரு. T. N. மகாலிங்கம் M. A., அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்.

இது இருபதாம் நூற்றாண்டு. மக்கள் வாழ்க்கையில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள ஒரு மாபெரும் நூற்றாண்டு. அதன் காரணமாக மனிதன் வாழ்வில் ஒருசில முன்னேற்றங்கள். ஆகவே அகமகிழ்ச்சி, இன்னொருபுறம் ஒருசில அவலநிலைகள் குடிக்கொண்டிருப்பதையும் உணருகிறோம். ஆகவே சிந்தனை நொந்து, நொந்து சீர்கெடுந்தன்மை சுருங்கக் கூறின் ஒருசமயம் வாழ்வே இன்பமயம் என்று கருதுமாறும், இன்னொரு சமயம் வாழ்வே 'மாயம், இது மண்ணாவது திண்ணம்' என்று கருது மாறும் அமைந்துள்ளது. சூழ்நிலைகளெல்லாம் மனிதனை இரண்டு வேறுபட்ட கருத்துடையவனாக ஆக்கிக்கொள்ள இடமளிக் கின்றன.

அறிவியல் துறையில் மனிதனது சக்திக்கு அப்பாற்பட்டது என்று கருதியவை எல்லாம், இன்று அவனால் ஆட்டிவைக்கப் படுகின்றன. ஒருசில வருடங்களுக்குமுன் பலமாதமாக பயணம் செய்து மேலை நாட்டை சென்றடைந்த மக்கள், இன்று ஒருசில மணி நேரத்தில் சென்றடைகின்றனர். எங்கேயோ வதிக்கும் மனிதனின் ஒலியை இன்று நாம் கேட்க முடிகின்றது வானொலி மூலமாக. ஆகவே காலத்தையும் தூரத்தையும் தன்வயப்படுத்தி, அவற்றிற்கு ஒருவரையறை எழுதும் வலிமை மனித சமுதாயத் திற்கு ஏற்பட்டு விட்டது. இது குறிப்பாக அறிவியல் துறை மூலமாக ஏற்பட்ட மகத்தான முன்னேற்றம். ஆனால் அதே அறி வியல் துறை மனிதனை தன்வயப்படுத்தி அடிமையாக்கியும் விடு கின்றதே! எங்கும் போர் என்ற பேச்சு; வெற்றி பெற்றுவிட் டால் தோற்றவனை அடிமைப்படுத்தி விடலாம் என்று வல்லரசு

களின் எண்ண அலைகள் எழுந்துள்ள காலம்; காரணம் அறிவியல் துறையின் அழிவு சக்தியின் ஏகபோக ஏதேச்சதிகார ஒலியேயாகும். இந்நிலையில் - அஃதாவது அறிவியல் கொடியதோர் அரக்கனுவும், அருளியில் பச்சிளங் குழந்தையாகவும் காட்சியளிக்கும் இந்நாளில் மனித உள்ளம் அழிவுப் பாதையை நோக்கி பீடுநடை போடுகின்றது என்றால் இது யாராலும் மறுக்க முடியாது. ஆழிசூழ் உலகின் அழிவில் கண்ணும் கருத்துமாக அறிவியல் செல்லாது இருக்க, சமுதாயத்தின் நிலை உயர்வு பெற்று, அதனை இயக்கிச் செல்லும் ஆன்றோர்கள், சான்றோர்களின் உள்ளங்கள் செம்மையுறல் நலமாகும்.

இன்று நாகரிகம் முதிர்ந்தாலும், மக்கள் புறவாழ்வில் பல விதமாற்றங்கள் ஏற்பட்டாலும், அகவாழ்வை நடத்திச் செல்லும் மனத்தில் மாசுநீங்கி பண்பட்டநிலை முழுவதும் ஏற்படவில்லையே! மனம் செம்மையுற்றால் மனிதனும் செம்மையாகின்றான். மனம் மாசுபெறின் மனிதனின் மாண்பிலும் மாசு ஏற்படுகிறது. ஆகவே மனிதனின், சமுதாயத்தின் புறத்தோற்றத்தைவிட, அகத்தோற்றம் பண்பட வேண்டும் என்று கருதியே இக் கட்டுரையை எழுதுகின்றேன்.

ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும், ஏற்றமும் இறக்கமும், பெருமையும் சிறுமையும் அந்நாட்டு மக்களையே சாரும். இக் கருத்திற்கு பொங்கி யெழும் உணர்ச்சி அலைகளைக் கொண்ட புலவர் பெருமக்களால் இயற்றப்பட்ட புறநானூறு என்ற சங்க இலக்கியமே சான்று பகரும். அந்நூற் புலவர்களில் ஒருத்தியாகிய, அமுதமொழி பாடல்களை பாடிக்கொடுத்த ஔவையார் பாடலே இதற்கு சான்றாகும். ஒரு நாட்டின் இயற்கை வளம் பெருமையுறுமாறு அமைந்திருக்கலாம், காலந் தவறாது ஞாலத்தை வாழ்விக்கும் ஞாயிற்றின் ஒளி தவறாது கிடைக்கலாம்; பார்க்குமிடமெல்லாம் பச்சை பசேரென்று புல்லினங்களும் பயிரினங்களும் காணப்படலாம். இருந்தபோதிலும் வாழும் மக்கள் எவ்வழி நல்லவரோ அவ்வழியே அந்நிலமும் நல்லதாகும் என்று அறைந்து கூறுகின்றாள் ஔவை என்ற பெண்பாற் புலவர். இதோ அவர் பாடலைப் படியுங்கள்.

" நாடாகொன்றோ காடாகொன்றோ
அவலாகொன்றோ மிசையாகொன்றோ
எவ்வழி நல்லவராடவர்
அவ்வழிநல்லை வாழியநிலனே "

ஆகவே சமுதாயம் முன்னேற்றமடைய மக்களுடைய பழக்க வழக்கங்களும் பண்பாடும் உளப்பாங்கும் உயர்வுபெறவேண்டும். ஆம்! மக்களின் சிந்தனையும் செயலும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற முறைப்படி மனம் பண்படுமென்றால் வாழ்க்கை ஒரு தண்ணொளி வீசும் பூஞ்சோலையாக மாறும்.

மனிதர்களின் வாழ்க்கைக்கே வழிகாட்டும் வள்ளுவர் தமது நூலில் ஒருசில கருத்துக்களை வலியுறுத்துகிறார். நாம் சொல்லும் சொல் விழுமியதாகவும், சுருங்கக் கூறினும் பயனுள்ளவாறும் அமைதல் நலம். பயனில் சொல் பாராட்டுவானை 'மகனெனல் மக்கட் பதடி எனல்' என்பதே தெள்ளு தமிழ்ப் புலவர் வள்ளுவப் பெருந்தகையின் கருத்து. இக்கருத்தை அரண்செய் தாற்போல, சேரநாட்டு பாவேந்தனும், செங்குட்டுவனின் இளவலுமாகிய இளங்கோவடிகளும், தனது காப்பியத் தலைவனும் கோவலன் தனது கருமணிப் பாவையன்ன கண்ணகியைப் பிரிந்து தகாத குணமுடையாரோடு சேர்ந்து சீர்கெட்ட தன்மையை கோவலன் வாயிலாகவே கூறியுள்ளார். அதே

" வறுமொழியாளரொடு வம்பப்பரத்தரொடு
குறுமொழிகோட்டி நெடுநகைப்புக்குப்
பொச்சாப்புண்டு பொருளுடையாளர்
நச்சுகொன்றேற்கும் நன்னெறியுண்டோ "

என்ற பகுதியாகும். நல்ல சொற்களைப் பேசும் மக்களே மக்களாவர் என்றே அடிகள் மறைமுகமாக இப்பகுதியில் வலியுறுத்து கிறார்.

உலகில் வாழ்ந்து மறைந்தவர்களை சமுதாயம் சீர்தூக்கிப் பார்த்து சிலரை நல்லவர்களென்றும், இன்னும் சிலரைத் தீயவர் களென்றும் கூறுகின்றது. இதற்கு உரைகல்லாக அமைவது அவரவர் செய்யும் வினையும் அதனால் விளையும் பயனுமே யாகும்.

பாரத மக்களின் நலனுக்காக தனது உடல் பொருள் ஆவி அனைத்துமே அர்ப்பணித்து ஆவி நீத்தார் அண்ணல் காந்தி யடிகள். மறைந்த பின்னும் நாட்டின் தலையாயவரென்றும், உரிமை வாங்கித் தந்த உத்தமர் என்றும் இன்று நம்மவரால் போற்றப் படுபவர் அவர். அடிப்படைக் கருத்துக்களில் பேறுபாடு கொண்ட அரசியல் வாதிகளும் ஒரே முகமாக 'உலகை உய்விக்க வந்த உத்தமர்' என்று காந்தியடிகளைக் கூறும் காரணம் யாது? காந்தியடிகளின் அகமும் புறமும், சிந்தனையும் செயலும் ஒன்றிய நிலையே இதற்குக் காரணம் என்பது யாவருமறிந்த உண்மை. இப்பெருந்தகையாரின் புறத் தோற்றத்தை நோக்கினல் இந்திய நாட்டின் வரலாற்றிலேயே சிறந்த ஒரு திருப்பு மையம் ஏற் படுத்தும் ஆற்றலுடையவர் என்று யார்தான் கூறுவர்? அன்பென்றும் பண்பு ஒருங்கே நிறைந்த அண்ண லன்றே அவர்! ஆகவேதான் வள்ளுவரும்,

"புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பிலவர்க்கு"

என்று கூறும்போது நாம் மகிழ்ச்சிப் பெருக்கில் ஈடுபடுகின்றோம். இதனல் ஒருவன் சமுதாயத்தால் போற்றப்படுவதற்கும் மற்றொருவன் சமுதாயத்தால் தூற்றப்படுவதற்கும் அவரவர் வினையே, செயலே காரணமாகும் வெளித்தோற்றமன்று என் பதை நாம் அறிய வேண்டும். இதனை வள்ளுவரே,

"பெருமைக்கும் ஏனைசிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்"

என்று அழகுற ஒரு குறட்பாவில் கூறுகிறார்.

ஒரு மனிதனின் புறத்தோற்றத்தில் மயங்கக் கூடாது என் பதை, சிந்தனையில் வைக்கும் போது உலக ஒழுக்கங்களைப்பற்றி யெல்லாம் பலவாறு அறியமுடிகின்றது. குணம், ஒழுக்கம், பண்பு இவற்றை சற்றும் நினையாது உயர்ந்தோர் என்று யாரையுமே உன்னுவது தவருக முடியும். ஆடை அணிகளால் அழகுறத் தோன்றுபவன் நல்லவன் என்ருல் அது அறியாமையின் ஒரு எடுத்துக்காட்டேன்றே கூறலாம். நல்ல திறனுடையோர் வெளித்தோற்றத்தில் அழகாக இல்லாமலும், நல்ல அழகுடை யார் வினைசெய்யும் உரனின்றியும் அமைவது இயற்கை.

உதாரணமாக சாக்ரடீசும், நாடக மேதை ஷா பெருமானும் புறத்தோற்றத்தில் கவர்ச்சியின்றி இருந்தாலும் செம்மைமனங் கொண்ட செம்மல்கள் என்பதில் ஐயமில்லை.

வள்ளுவர் மேற்கூறிய கருத்தை உவமை வாயிலாக குறட் பாக்களில் பலவாறு கூறியுள்ளார். தமிழ் நாட்டிற்கே உரிய பழவகைகளில் சிறந்த பலாப்பழம் முட்களுடன் தோன்றினும் அதனுள்ளே உவகை பெறுமாறும் நாவிற்கு இனிமையான சுவை கொடுக்குமாறும் அமைந்துள்ள பழச்சுளைகளை நாம் இன்றும் என்றும் தின்று மகிழலாமல்லவா? புறத்தோற்றம் முள்ளுடன் இருந்தாலும் அகத்தோற்றம் அவ்விதமில்லையே! அதுபோல யாழ் வடிவில் வளைந்து கவர்ச்சியற்றதாயினும் செயலில் செவ்விதாக இனிய ஓசையைக் கொடுக்கின்றது. ஆனல் அம்பு வடிவால் செவ்விதாயினும் செயலால் கொடிதாகத் தோன்றி கொலைசெய்கின்றதல்லவா? அழகான உடலமைப்பு கொண்ட காரணத்தாலே நல்லபாம்பு என்று பெயர் பெற்ற ஒரு பாம்பு செயலால் கொலைபுரிகின்றதே! இன்னபல சான்று களால் ஒரு பொருளையோ மனிதனையோ மதிக்க அதனதன் வினையே சிறந்த உரைகல் என்று அறிகிறோம். இதையே,

" கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங்கன்ன
வினைபடுபாலாற் கொளல் "

என்று கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

இன்னும், நுண்மாண் நுழைபுலன் கொண்ட கற்றவரெல் லாம் நல்லவரல்லர். இலக்கியங்கள் பலகற்று நம்மவர் இதயம் இரும்பூதெய்யுமாறு நாவன்மை படைத்து பேசுபவர்களும், தமது வாழ்வில் அக்கருத்துக்களை செயலில் காட்டாமல் வாழ் கின்றரே! ஆகவே தான் சொல்வதொன்றும் செய்வதொன்று மாக காணும் கற்றவர்களைவிட 'கல்லாதபேர்களே நல்லவர்கள்' என்று தாயுமானவர் கருதினர் போலும்.

சுருங்கக் கூறின் வரலாற்றுப் பகுதிகளில் ஏற்றம் பெற்று காலவெள்ளத்தில் கலங்கரை விளக்காகக் காட்சியளிக்கும் பெரு மக்களெல்லாம், தமது மெய்வருந்த நற்பணி புரிந்து நானிலம்

(தொடர்ச்சி 275-ம் பக்கம் பார்க்க)

உய்யக்கொண்டான்மலை

(திருக்கற்குடி)

நீரக லந்தரு சென்னி நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த தண்மதி சூடிய சைவர்
போரக லந்தரு வேடர் புனத்திடை யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங் கற்குடி மாமலை யாரே

—திருஞானசம்பந்தர்.

பெண்ணவனை யாணவனைப் பேடா னானைப்
பிறப்பிலியை யிறப்பிலியைப் பேரா வாணி
விண்ணவனை விண்ணவர்க்கு மேலா னானை
வேதியனை வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனைப் பண்ணில்வரு பயனா னானைப்
பாரவனைப் பாரில்வா ழுயிர்கட் கெல்லாம்
கண்ணவனைக் கற்குடியில் விழுமி யானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே.

—திருநாவுக்கரசர்

செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே
மையார் கண்ணிபங்கா மதயானை உரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னிநின்ற
ஐயா எம்பெருமா னடியேனையு மஞ்சலென்னே

—சுந்தரர்

உய்யக்கொண்டான் மலை என்று இப்போது வழங்கும் ஊரே திருக்கற்குடி என்னும் பாடல்பெற்ற சிவத்தலம். இது திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே மூன்று கல் தொலைவிலுள்ளது. இறைவன் உயிர்களை உய்யக் கொள்வதற்காக எழுந்தருளினமையால் உய்யக் கொண்டான் திருமலை என்ற பெயர் ஏற்பட்டதென்பர். கற்பாறைகள் சூழ்ந்த ஒரு குன்றின்மேல் கோயில் இருப்பதால் திருக்கற்குடி என்ற பெயர் உண்டாயிற்று.

"திருக்கோயில்" மார்ச் 1960-ல் வெளிவந்துள்ள இக்கட்டுரை சென்னை அரசாங்க அறநிலைய பாதுகாப்பு ஆணையாளர் அனுமதியுடன் பிரசுரிக்கப் பெற்றது.

திருக்கோயில் சுமார் 30 அடி உயர முள்ள பாறையின்மேல் இருக்கிறது. 64 படிகள் ஏறி மேல் அடையவேண்டும். குன்றைச் சுற்றி கோட்டைபோல மதில் இருக்கிறது. திருவீதி உள்பட கோயிலுக்கு ஐந்து பிரகாரங்கள் உள்ளன. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியிருக்கிறது. இரண்டு அம்பாள் சந்நிதிகள் ஒன்று மேற்கையும் ஒன்று கிழக்கையும் பார்க்க இருக்கின்றன. கோயிலுக்கு மூன்று வாயில்கள்; இரண்டு தென்புறமும், ஒன்று கீழ்புறமும் உள்ளன. ஒன்றில்தான் சிறுகோபுரம் இருக்கிறது.

இறைவன் திருப்பெயர்கள் உய்யக்கொண்ட நாயனர், உச்சீவ நாதர், கற்பக நாதர், முத்தீசர் என்பன. தேவியின் திருநாமம் அஞ்சனுட்சி. சுந்தரர் தேவாரத்தில் மையார்கண்ணி என்று குறிக்கிருர். இத்தலத்தின் தீர்த்தங்கள் பொன்னெளி ஓடை, சர்ப்பநதி, ஞானவாவி என்ற முத்திதீர்த்தம்,எண்கோணக் கிணறு, நாற்கோணக் கிணறு முதலியன. தலவிருட்சம் வில்வம்.

மலைக்கோயிலுக்கு வெளியில் மேல்புறம் கரன் வழிபட்டதாகச் சொல்லப்படும். ஆளுடையார் கோயில் இருக்கிறது. முன்னுல் அழகிய பெரிய நந்தி காணப்படுகிறது. மலைக்கோயில் மூன்ரும் பிரகாரத்தில் பிடாரி கோயிலும் இருக்கிறது.

இத் தலத்தை வழிபட்டுப் பேறு பெற்ருேர் நாரதர், மார்க்கண்டேயர், உபமன்யு முனிவர், கரன். ஈழநாட்டரசன் முதலியோராவர். கோயிலில் இரண்டு காலபூசைதான். பங்குனி மாதம் பெருவிழா நடைபெறுகிறது. கோயில் தருமபுர ஆதீன ஆட்சியில் இருந்து வருகிறது.

இத்தலத் திறைவன் பேரில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் மூன்று பதிகங்கள் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் ஒரு பாடலில் 'துன்பமொ டின்பமதெல்லாம் கடந்தவர் காதலில் வாழும் கற்குடி மாமலையாரே' என்று கூறுகிருர். திருநாவுக்கரசர் பாடிய பத்துத் திருத்தாண்டகச் செய்யுட்களிலும் 'கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தைக் கண்ணுரக் கண்டேன் நானே' என அருமைபட உரைக்கிருர். கல் வெட்டுக்களில் 'கற்குடி விழுமிய நாயனர்' என்று காணப் பெறுவது ஈண்டு குறிக்கத் தக்கது.

சுந்தரர் ஒவ்வொரு பாடலிலும் 'திருக்கற்குடி மன்னி நின்ற அடிகேள்........அடியேனையும் அஞ்சலென்னே' என்று அருளுகிருர். அருணகிரிநாதர் இரண்டு திருப்புகழ்ப் பாடல்களை இயற்றியிருக்கிருர். "தமிழ்க்குக் கவிக்குப் புகழ்ச் செய்ப்பதிக்குத் திருக்கற்குடிக்குப் பெருமாளே" என்றும், "உனைச்சொற்றுதிக்கத் தக்க கருத்தைக் கொடுத்துச் சித்தி உடைக் கற்குடிக்குட் பத்தர் பெருமாளே" என்பவை சிந்தித்து மகிழற்பாலன. அருணகிரியாருக்கு முருகன் அருள்புரிந்த ஆதிவயலூர் என்னும் பதி இத்தலத்திற்கு மேற்கே நாலு கல் தொலைவிலுள்ளது. மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், கற்குடி மாமலை மாலை என்ற நூலைப் பாடியுள்ளார்கள். அதில் ஒரு பாடல் வருமாறு :—

மானிடப் பிறவி வந்தது மனத்தால்
 வாக்கினுற் காயத்தாற் பணிசெய்
தானிடத் தைந்து மாடுநின் னடிக்கீ
 ழமரவென் றறிந்திலன் சிறியேன்
கூனுடைக் குலைய குறுங்கழித் தரம்பைக்
 கொழுங்கனி யிழிந்ததேன் கருப்பங்
கானிடைப் பாயும் படுகர்சூழ் தெய்வக்
 கற்குடி மாமலைப் பரனே.

இக்கோயிலில் பல தமிழ், கிரந்த கல் வெட்டுக்கள் இருக்கின்றன. இத்தலம், பாண்டி குலாசனி வளநாடு. தென்கரைக் கேரளாந் தகவளநாடு, இராஜமகேந்திர வளநாடு, இராஜகம்பீர வளநாடு என்று வெவ்வேறு காலங்களில் அழைக்கப்பட்ட பகுதியில் உறையூர்க் கூற்றத்தில் உள்ளது என்றும், இராஜசிரய சதுர்வேதி மங்கலம், நந்திவர்ம மங்கலம் என்றும் குறிக்கப் பெறுகிறது. நந்திவர்ம பல்லவன் காலத்திலேயே இக்கோயில் இருந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. இராஜராஜன் 1. உத்தம சோழன், குலோத்துங்க சோழன், இராஜேந்திர சோழன் 1. வீரராஜேந்திரன், பராந்தகன் 1, விஜயநகர மல்லிகார்ச்சுன மகாராயர் இவர்கள் காலத்திய கல்லெழுத்துக்கள் அவை. இறைவன் பெயரைக் கல்வெட்டுக்களில் கற்குடி விழுமியார், உய்யக்கொண்ட நாயனுர், திருக்கற்குடி ஆழ்வார், உய்யக்கொண்டான் திருமலைநாயனுர், திருக்கற்குடி விழுமியதேவர், திருக்கற்குடிப் பரமேசுவரர் என்று பலவகையாகக் குறிக்கப்

பெற்றிருக்கிறது. விளக்கெரிக்க ஆடுகள், பூசைக்கு நிலம், பொன், செம்பியன் மாதேவியரால் நவரத்தினப் பொன்முடி, விழாச் செலவுக்குப் பொன், கோயிலுக்கு கிராமவரிப்பணம், முதலிய தானங்கள் செய்ததைக் குறிக்கின்றன. இரண்டு கிராமங்களின் வரிப் பணத்தைக் கோயிலுக்கென ஒதுக்கப் பட்டது; கோயில் நிலங்களை அளந்து (Survey) கணக்கெடுத்தது; மலையடிவாரத்தில் துறவிகளுக்கு அமுதளிக்க ஏற்பாடு செய்தது; இறைவருக்குப் பொன் ஆபரணம் அளித்தது; இன்னோரன்ன பிற அரிய செய்திகளை அவை அறிவிக்கின்றன. 18-ஆம் நூற்றுண்டில் ஆங்கிலேயரும், பிரஞ்சுகாரரும், மைசூர்க்காரரும் மாறி மாறித் தங்கியிருக்கும் கோட்டை அரணாகவும் இக்கோயில் பயன்பட்டிருக்கிறது. சர்ப்பநதி அல்லது குடமுருட்டி என்ற தீர்த்தம் கல்வெட்டுக்களில் உய்யக்கொண்டான், வைரமேக வாய்க்கால் என்னும் பெயர்களால் குறிக்கப்பட்டிருக்கின்றன.

எத்தி யலவன் இடங்தெடுத்த ஆராலைக்
கொத்தி முகங்தெடுத்த கூன்கொக்குச் — சுத்த
இழையேற்றம் போன்ருளிரும் கற்குடியே கங்கை
உழையேற்ற செஞ்சடையா னூர் — தனிப்பாடல்.

ஷை ஆலயம் தருமையாதின பரிபாலனத்தில் இருந்து வருகிறது.

(முன் 271-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்படையச் செய்தோராவர். மாண்டு மறைந்த பின்னும் தனது பெயர் மாட்சிமை பெற வேண்டுமென்று யாவரும் கருதுவர். தாமரை இலை போல மாய்ந்தோர் பலராயினும், இவ்வுலகில் உரையும் பாட்டும் உடையோர் ஒரு சிலரே. அவர்களின் செயலும், நாட்டிற்காக புரிந்த நற்பணியும் இன்று மட்டுமன்று, என்றுமே நமது சிந்தனையைத் தூண்டிக்கொண்டு தான் இருக்கும். மனம் பண்பட்டு செயல் புரிந்த காரணத்தாலேயே திருவள்ளுவரும் காந்தியடிகளும் அழியும் உலகத்தில் அழியாப் புகழைப் பெற்றனர். அப்பெரியார்களெல்லாம் காட்டிய நெறியில் ஊக்கங்கொண்டு, நாட்டிற்கு வேண்டிய ஆக்க வேலைகளில் ஈடுபடுவதே நம்மவர் கடமை.

பயன் என்ன?

திரு. ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள்,
திருவாவடுதுறைஆதின சமயச் சொற்பொழிவாளர், அம்பாசமுத்திரம்.

திருவள்ளுவர் திருக்குறளிற் கல்வியின் பயன் என்ன?

அறிவின் பயன் என்ன? செல்வத்தின் பயன் என்ன?

மானிடப் பிறவியின் பயன் என்ன? எனக் கேட்டுப் பதில் அளித்துள்ளார். மக்கள் சிந்தித்துப் பயன்படுத்த வேண்டும். திருக்குறளிற் கேள்வியும், விடையும் ஒரே குறளிற் காணலாம். அதுவும் சுருக்கமாகவும் பொருள் உடையதாகவும் இருக்கும்.

இக்கட்டுரையில் கல்வியின் பயன் என்ன? யென்பதைச் சிந்திக்கலாம்.

கற்றதனுல் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்.

இதன் பொருள்:- எல்லா நூல்களையும் கற்றவர்க்கு அறிவினுல் உண்டாகிய பயன், மெய்யறிவினையுடையவனது நல்ல அடிகளை வணங்காராயின் யாது? பயனில்லை யென்பதாகும். வாலறிவன் – சிவபெருமான். ஆகவே ஞானமில்லாத கல்வி பயன் அற்றதாகும்.

இந்த உண்மையைப் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் யெடுத்துரைக்கிருர். நக்கீரர் புலவர்கட்குத் தலைவர். கல்விக்குரிய செருக்கு உடையவர். தானே எல்லாம் அறிந்த தகுதி உடையவர் யென்ற கருத்துக்கொண்டவர். தனக்கு மேல் ஒருவரும் இல்லை யென்று, தன்னைத் தானே மதித்துக் கொள் பவர். பிறரிடம் குறை காணுபவர். மனதில் அழுக்காறு உடையவர். ஆனுல் ஞானமில்லாதவர்.

தருமி யென்பவன் அந்தணன்; ஏழை; கல்வி அறிவு உடையவன் இல்லை; பொருமை உடையவன் இல்லை; மனத் தூய்மை உடையவன்; கடவுளிடத்து பக்தியுடையவன்; எல்லாம் சிவன் செயல் யென்பதில் முழுநம்பிக்கையுடையவன்; ஞானம் உடையவன்; கலியாணம் செய்து கொள்ள ஆசைகொண்டான். கடவுளிடம் முறையிட்டான்.

பக்தி வலையில் படுவோன் பரமேசுவரன்; ஏழைக்கு இரங் கினன். பாட்டெழுதிக் கொடுத்தான். ஏழை தருமி அரசவையில் கவியைக் காட்டிக் கொடுத்தான். அரசன் சந்தேகம் தீர்ந்தது. புலவர்கள் செய்யுளும் பொருளும் கண்டு வியந்தார்கள். அந்தச் செய்யுள் திருவருளால் ஆயது.

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே."

(இதன்பொருள்:– மணத்தினை ஆராய்ந்து திரியும் வாழ்க்கை யினுடைய அழகிய சிறையினையுடைய வண்டே, பயிற்சி மிக்க நட்பும், மயில்போல் சாயலும், நெருங்கிய பற்களையும் உடைய இவ்வரிவையின் கூந்தல்போல் நறுமணமுடையன நீ அறியும் பூக்களுள் உளவோ, விருப்பம்பற்றிக் கூறுது உண்மை கூறுக. என்பதாகும்.)

தருமி பொற்கிழியைப் பெறச் சென்றுன். நக்கீரர், அழுக் காறு காரணமாகத் தடுத்தார். நக்கீரர் புலமையால் பாட்டில் பொருள் குற்றம் உள்ளது. பெண்களின் கூந்தலுக்கு இயற்கை நறுமணம் கிடையாது. ஆகவே நீ பொற்கிழி பெறத்தகுதி அற்றவன் யென்ருர். பசுவில் கூழையும் பார்ப்பானில் ஏழையும் யென்று இகழ்தல் கூடாது.

தருமி, ஆலவாயவனிடத்தில் முறையிட்டான். ஏழைக்கு இரங்கும் இறைவன், புலவராக அருளுருக் கொண்டான் அர சவைக்கு வந்து நக்கீரருடன் தர்க்கமிட்டான். நக்கீரன் உண்மை

உணரவில்லை. சிவபெருமான் தன்னை உணர்த்த நெற்றிக்கண்ணைக் காட்டினான். நக்கீரன், கல்வியின் செருக்கினால் "தேவேந்திரன் போல் உடல் முற்றும் நீர் கண்களை உடையீரானாலும் நும் செய்யுள் குற்றமுடையதே" என்றான். இந்த இடத்தில், ஞான மில்லாத கல்வியினால், அழுக்காறு கொண்டு, உண்மையை உண ராமல் திமைக்கு ஆளானான். ஆண்டவன் ஆணைப்படி பொற் றாமரையில் வீழ்ந்து வருந்தலுற்றான்.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுளி உய்த்து விடும்,

இதன் பொருள்:- பொறாமையானது தன்னையுடையவனைக் கெடுத்து நரகத்திற்றள்ளும் என்பது.

நக்கீரன் இல்லாத சபை பெருமை இழந்தது. புலவர்கள் வருந்தினர். அதைப்பற்றிப் பரஞ்சோதியார் அருளுகிறார். செய்யுள் வருமாறு

" ஏன்ற வேந்தன் இலாக்குடி ஈட்டமும் இன்கதிர்
கான்ற நாயக மாமணி போதிய கண்டிகையும்
ஆன்ற ஞானமிலாதவர் கல்வியு மானதே
சான்ற கீரனிலாதவை கூடிய சங்கமே "

இதன்பொருள்:- பொருந்திய மன்னன் இல்லாத குடியின் கூட்டமும், ஒளிவீசும் நடுநாயகமாகிய பெரிய மணியை இழந்த கண்டிகையும் போலும், நிறைந்த மெய்யுணர்வும் இல்லாதார் கல்வியும்போல, நக்கீரன் இல்லாதசபை பயனில்லாத திருந்தது என்பதாகும். "ஞானமிலாதவர் கல்வியுமானதே" என்பது குறிப் பிடத்தக்கது.

ஞானமுடைய கல்வியாளர், கடவுள், உயிர்கள், தளை எனக்கூறப்படும் முப்பொருள் உண்மையைக் கொள்வர். தளை (மாயை) அறிவில்லாதது. உயிர்கள் அறிவும் அறியாமையும் உடையன. கடவுள் பேர் அறிவுப்பொருள். இவற்றை ஞானத் தால் அடைந்து, கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று."

"தெய்வம் இகழேல்."

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்
கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே.

இது மாணிக்கவாசக சுவாமிகள் கருத்தாகும். கற்றோர்கள் எல்லோரும் ஞானமெய்தி, கடவுள் நம்பிக்கையுடன் தொழுதால் நாடு நலமுறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
நினைவு மகப்பேறு உதவி வகையரு நிதி
நிலப்பெறுமானம் ரூ. 3,00,000/-

திருக்கைலாசபுரம் எனும் ஸ்ரீவைகுண்டத்தில் தோன்றி, ஐந்தாவதாண்டில் செந்திலாண்டவன் திருவருளால் ஊமை நீங்கப் பெற்றுப் பல தலங்களையும் தரிசித்து மதுரையை அடைந்து, மீனாட்சியம்மையால் முத்தாரம் அணிவிக்கப்பெற்றுப் பின்னர்த் தருமபுரத்தில் துறவு பூண்டு, சிவஞான பானுவாகிப் பரதகண்டம் முழுதும் சிவஞான ஒலிபரப்பியவர்களாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவில் பின் 3, 4, 5 பாராக்களில் விவரிக்கப்பெற்றுள்ளவாறு மகப்பேறு உதவி, மாணவர் மதிய உணவு, ஸ்ரீ காசிமடம் திருப்பணி, ஆகிய தருமங்களை நடத்துதற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது 'ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மகப்பேறு உதவி வகையரு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதன் சேர்க்கையில் (ஏ. ஷெடியூலில்) விளக்கம் கண்டிருப்பதும், நமக்குச் சொந்தமாய் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து வருகிறதுமான தஞ்சாவூர் ரிஜிஸ்தரேஷன் டிஸ்டிரிக்ட்டு திருவிடைமருதூர் சப் ரிஜிஸ்தரைச் சேர்ந்த கும்பகோணம் தாலுக்கா, 44 மேலச்சூரியமூலை வட்டம், இடையாகல்லூர் கிராமத்தில் உள்ள நன்செய், புன்செய், நத்தம், ஏக்கர் 229 செண்டு 66 பரப்புள்ள நிலங்களின் வருஷாந்திர வருமானத்திலிருந்து சர்க்கார் கிஸ்தி, கிராம சிப்பந்திச் செலவு, கிராம சமுதாயம், மராமத்துச் செலவு வகையரு செலவு போக எஞ்சிய வருமானம் இதில் பின் விவரிக்கப்பெற்றுள்ள தருமங்களுக்கு எனச் செலவிடப்பெறும்.

3. அ. மங்கலமென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு என்று வள்ளுவரும்,

"கற்புடுத்து அன்பு முடித்து நாண்மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு — மக்கட்பே
றென்பதோ ராக்கமும் உண்டாயின் இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு"

"கல்வியே கற்புடைப் பெண்டிர் அப்பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே ஈர்ங்கவியா"

என்று குமரகுருபர சுவாமிகளும்,

"மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே"

என்று சங்ககாலத்துப் பாண்டியன் அறிவுடை நம்பியும், மகப்பேற்றின் பெருமையை ஓதியுள்ளனர். அத்தகைய மகப்பேற்றினைப் பெற்றவர்க்கு மருத்துவ உதவிக்காகத் தலைக்கு ரூ. 15/- வீதம் பின் விவரித்துள்ளவாறு அளிக்கப் பெற்றுவரும்.

ஆ. இதன் B ஷெடியூலில் விவரித்துள்ள கிராமங்களில் ஏற்படும் பிரசவங்களில் மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ 12 பிரசவங்கள் வீதம் ஆண்டொன்றுக்கு மொத்தம் 150 பிரசவங்களுக்கு இம்மகப்பேறு உதவித் தொகை ஆண்டுதோறும் அளிக்கப் பெற்றுவரும்.

இ. பிரசவித்த 15 நாட்களுக்குள் பிரசவித்தவருடைய குடும்பத் தலைவர் பிரசவம் நடந்த ஊர் டாக்டர் அல்லது மகப்பேறு மருத்துவ இல்லத்து (Maternity Ward) மேற்பார்வையாளர் வழியாக, அவ்வூர் வில்லேஜ் முன்சீப் (Village Headman) இடமிருந்து பெற்ற அத்தாட்சியுடன் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். தாயும் சேயும் ஆகிய இருவரும் நலமாக இருப்பதாக அத்தாட்சிபெற்று வருகிற மனுதார்களுக்கு மட்டும் அவ்வூர் (Village Headman) வழியாக மருத்துவ உதவித் தொகை ரூ. 15/- வீதம் அளிக்கப்பெறும். அத்தொகையை ஷை (Village Headman) மனுதாரருக்கு அளித்து இரசீது பெற்று நமக்கு அனுப்புதல் வேண்டும். (Village Headman) தாம் கொடுக்கும் அத்தாட்சியில் குழந்தை பிரசவித்தவர் (1) அவ்வூர் வாசி அல்லது அவ்வூரில் பிறந்தவர் என்றும் (2) ஏழையென்றும் (3) தாயும் சேயும் நலன் என்றும் குறிப்பிடவேண்டும்.

ஈ. இவ்வுதவித் தொகை சாதி, குலம், மதம் முதலிய பாகு பாடின்றி ஏழைகளாக உள்ளவர்களுக்கு மட்டும் அளிக்கப் பெறும்.

உ. இங்ஙனம் மகப்பேறு மருத்துவ உதவித் தொகையாக ஆண்டொன்றுக்குச் செலவிடப்பெறும் உத்தேசத் தொகை ரூ. 2250/- ஆகும். இத்தொகை நிகர வருமானத்துக்கு ஏற்பக் கூட்டவும் குறைக்கவும் பெறும்.

4. அ. நம்மால் திருப்பனந்தாளில் குமரகுருபர சுவாமிகள் நினைவில் ஒரு உயர் தொடக்கப் பள்ளியும், திருலோக்கியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவில் ஒரு தொடக்கப் பள்ளியும் நடத்தப்பெற்று வருகின்றது. இவ்விரு தொடக்கப் பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளில் திருப்பனந்தாளில் 100 பேருக்கும், திருலோக்கியில் 50 பேருக்கும் தம்முடைய செலவில், அரசியலாரின் உதவித் தொகையும் பெற்று, மதிய வுணவு - நண் பகல் உணவு - Midday Meal - அளிக்கப்பெற்று வருகிறது. இனியும் தொடர்ந்து திருப்பனந்தாள் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் உயர் தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளில் 100 பேருக்கு மதிய உணவு அளிக்க ஆண்டொன்றுக்கு ரூ, 750/-ம் திருலோக்கி ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தொடக்கப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளில் 50 பேருக்கு மதிய உணவு அளிக்க ஆண்டொன்றுக்கு ரூ. 500/-ம் அளிக்கப்பெற்று வரும்.

ஆ. இவ்வுதவித் தொகை இவ்விரு ஊர்களிலும் மதிய வுணவுக் குழுவினர் வசம் ஒப்படைக்கப்பெறும். அக்குழு இவ் வுதவித் தொகையோடு அரசியலார் அளிக்கும் உதவித் தொகையும் கொண்டு ஷை இரு ஊர்களிலும் உள்ள தொடக்கப் பள்ளிகளில் மதிய வுணவு அளித்து வரவேண்டும். அன்றியும் அம்மதிய உணவுக் குழுவினர், மதிய உணவு அளித்தமைக்குரிய கணக்குகளை மாதந்தோறும் நமக்கும் அனுப்பிவரவேண்டும்.

இ. இம்மதிய உணவு உதவித் தொகை நிகர வருமானத் துக்கு ஏற்பக் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

ஈ. அரசியலாரால் உதவித் தொகை தரப்பெருது போயின் நாம் அளிக்கும் மேலே குறிப்பிட்ட தொகையைக்கொண்டு எவ்வளவு பேருக்கு மதிய வுணவு அளிக்கலாமோ அத்தனைப் பேருக்கு மட்டும் மதிய உணவு அளிக்கப்பெறும்.

5. அ. மேற்குறித்த இரண்டு தருமங்களுக்கும் செலவு செய்தபிறகு எஞ்சியுள்ள தொகையில் ரூ. 5000/- நமது முன்னோர்களால் திருப்பனந்தாளில் நிர்மாணிக்கப்பெற்று இருந்து வருகிற ஸ்ரீ காசிமடத்துத் திருப்பணி, விருத்தியாம்சம் ஆகிய வற்றுக்கு ஆண்டுதோறும் செலவிடப்பெற்றுவரும். எந்த ஆண்டி லேனும் இத்தொகை முழுவதும் செலவு செய்யப்பெருவிடில் அவ்வெஞ்சிய தொகை திருப்பணிக்கென்றே சேமித்து வைத்துப் பிந்தின ஆண்டுகளில் தேவைக்கு ஏற்றாற்போல் செலவு செய்யப் பெற்றுவரும்.

ஆ. இதுகாறும் மேலே குறிப்பிட்ட மூன்று தருமங் களுக்குச் செலவு செய்ததுபோக எஞ்சியுள்ள தொகைகள் இது போன்ற இதர தருமங்களுக்குச் செலவு செய்யப்பெறும்.

6. இத் தருமங்களுக்கு என ஒதுக்கப்பெற்ற இந்த நில புலங்கள் நம் சுவாதீனத்திலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ள வர்கள் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் பரிபாலனத்திலும் இருந்துவரும்.

7. இந்தச் சொத்துக்களின் மதிப்பு ரூ. 3,00,000/- உத் தேச வருஷ வருமானம் ரூ. 15,000/-

B. ஷெடியூல்.

கிராமங்கள் விவர ஜாப்தா

1. திருப்பனந்தாள்
2. பாலூர்
3. கட்டாநகரம்
4. மணிக்குடி, கீரங்குடி உட்பட
5. சின்னக்கட்டாநகரம்
6. திருவாய்ப்பாடி

7. வீராக்கன், ஆனைக்கோவில் உட்பட
8. பட்டம்
9. மாராச்சேரி
10. கோழிக்குத்தி
11. உக்கரை
12. வடபாதி
13. தத்துவாஞ்சேரி
14. சிதம்பரநாதபுரம்
15. முள்ளங்குடி, மதகுசாலை
16. அம்மையப்பன்
17. மட்டியூர்
18. குருவாடி
19. திருலோக்கி, நெடுந்திடல், வடபிசிவு, விசுவநாதபுரம் [உட்பட
20. சிவபுராவி, மனஞ்செரி உட்பட
21. 44-ம் நெ. சூரியமூலை - இடையாநல்லேரிணி, காரிப் [பிரியன்குரிச்சி உட்பட

திருப்பனந்தாள் 19-3-1960. } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on 22-6-1960 as No. 738 of 1960, of Book 1 Volume 1130, pages 81 to 86.

முதல் திருமுறை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மா னிவனன்றே.

‘பல வாய வேடங்கள் தானே யாகி’

தேவார, தமிழிசை மணி திரு. தி. தெண்டபாணி அவர்கள்
தேவஸ்தானம், திருவெண்காடு.

“ கலைஞானங் கல்லாமே கற்பித்தானைக்
கடுநரகஞ் சாராமே காப்பான் தன்னைப்
பல வாய வேடங்கள் தானேயாகிப், பணிவார்
கட் கங்கங்கே பற்றுனைச், சிலையாற்
புர மெரித்த தீயாடியைத் திருப்புன்கூர்
மேவிய சிவலோகனை, நிலையார் மணிமாட
நீடூரானை, நீதனே னென்னே நான்
நிலையா வாறே.”

திருப்புன்கூர் மேவிய சிவலோகனை:-

திருப்புன்கூர் என்ற க்ஷேத்திரத்தில், நந்தன் என்ற சிவ பக்தன் சிவனை வழிப்படச் சென்ற பொழுது, ஆங்கே நந்தியம் பெருமான் எதிரேயிருந்து, சிவனை மறைத்து, சிவ வழிப்பாட் டிற்கு இடையூருக விருந்தார். அதனைக் கண்ட நந்தன் சிவ வழிபாட்டிற்கு நந்தியம் பெருமான் மலைபோலிருந்து இறைவனை மறைத்திருப்பதை உணர்ந்து மனமுருக வருந்தி வேண்டுகிருர். அப்பொழுது சிவபெருமான், நந்தியம்பெரு மானை, சிறிது விலகச் செய்து நந்தன் என்ற பக்தனுக்கு உலகு உய்யும் வண்ணம் காட்சியளிக்கின்ருர்.

வெண்காடு மேவிய விகிர்தன்:-

தேவர்கள், சிவபெருமானை வழிபடும் வண்ணம் சுவேத வனத்தில் தவஞ் செய்யுங்கால், மருத்துவாசுரன் என்ற அரக்கன், தேவர்களின் உன்னத தவங்களை அழிக்கிருன். அக்கணம், தேவர்கள், சிவபெருமானிடம் போய் முறையிட, பெருமானுர் தனது திருநந்தித் தேவரை ஏவி, மருத்துவனை சம்ஹரிக்க அனுப்புகிருர். நந்தித் தேவர், அசுரனிடம் போர் புரிந்து, அசுரனுல் தோற்கடிக்கப்பட்டு, உடம்பில் பல வின்னங்களுடன், சிவபெருமானிடம் சென்று மிகவும் வருந்துகிருர். உடனே,

முக்கண்ணனர், அதிக ஆத்திரங்கொண்டு அகோர ரூபத்தில் தோன்றி, அசுரனின் பலரூபங்களை அழித்து, விண்ணுலகத் தார்க்கும், மண்ணுலகத்தார்க்கும் காட்சி தருகிறார்.

"கருநிறமு மணிமாலை புனையழகும், வளையெயிறும்,
கவனைச்செய்ய,
எரிசிகையும், நுதல்விழியும், நடைக்கோல இணையடியும்,
இலக எட்டு கரநிலவ, மணிப்பலகை வேண்டலை
வாள் கடி துடி யேர் சூல மேற்று, வெருவ மருத்துவனை
அடர் அகோர சிவன் துணைப் பதச்சீர் விளம்புவாமே."

என்று கடவுளர் தம் பெருஞ்செயலைப் புகழ்ந்து, பின் தோன்றிய சைவ எல்லப்ப நாவலர் அவர்களும் பாடியுள்ளார்.
அப்பர் சுவாமிகளும்,

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்போடு மலர்கள் கோண்டாங் கார்வத்தை யுள்ளே
வைத்து,
விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினல் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்ட னரே."

என்று கடவூர் வீரட்டனரின் மேல் நெஞ்சுருகப் பாடியுள்ளார்.

பதினறு வயது நிரம்பப் பெருத, மார்க்கண்டேயர், என்ற இளம் பக்தர், அதிகாலையிலெழுந்து நீராடி மலர் கொய்து முறை யாக சிவனை வழிப்பட்டு வரும்பொழுது ஒருநாள் காலன் மார்க் கண்டேயரைத் துரத்துகின்முன். அவ்வமயம், மார்க்கண்டேயர் சிவபெருமானை நினைந்து, சிவலிங்கத்தைக் கட்டித் தழுவுகின்ருர். அமிர்த கடேசுவரர், பக்தரின் துயரை நீக்க, உருவத் திருமேனி கொண்டு காலசம்ஹாரமூர்த்தியாகத் தோன்றி, காலனை வதம் செய்து,மார்க்கண்டேயருக்குக்காட்சி தந்தருளுகிருர். இம்மாதிரி சிவபெருமான் பலவேடங்களில் தோன்றி ஆங்காங்கே, சிவ பக்தர்களுக்குக் காட்சி யளிக்கிருர். ஆகவே, உலக மக்களாகிய நாம் எல்லோரும் பல இடங்களில். பல வேடங்களில் தோன்றி, பல திருவிளையாடல்கள் புரிந்து வருகின்ற இறைவனை ஆங்காங்கே சென்று, வழிபட்டு, இம்மை, மறுமை இன்பங்களை அடைய வேண்டுகிறேன்.

முற்றும்

1135-ம் ஞு மார்கழி, தை மாதங்களில்

கலைக்கோவிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
7156 to 60	காஞ்சி காமாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்	காஞ்சி இரா. குப்புஸ்வாமி B. A.
7161	Special Lectures on Saiva Siddhanta	K. M. Balasubramaniam Published by the Annamalai University.
7162	பண்டாரசாத்திரம் தசகாரியங்கள்	திருவாவடுதுறை ஆதீனம்.
7163	முப்பொருள் விளக்கம்	,,
7164 to 71	திருவதிகை வீரட்ட திருப்பதிகங்கள்	தருமபுர ஆதீனம்
7172 to 74	மகா கயிலாய யாத்திரை	,,
7175 to 82	திருவெண்ணைநல்லூர்த் திருப்பதிகம்	,,
7183 to 88	திருப்புறவார் பனங்காட்டூர்த் திருப்பதிகம்	,,
7189	திருக்கடவூர் நாயன்மார்கள் புராணம்	குங்கிலியக்கலய நாயனுர் திருநாள் நினைவுமலர் ஸ்ரீ பிச்சக்கட்டளை எஸ்டேட் திருக்கடவூர்.
7190	தமிழ் மொழி வரலாறு	கவிராச பண்டித, இரா. சுப்பிரமணிய நாவலர் - தக்கலை.

7191 தமிழ்ப் பொழில்	கரந்தை தமிழ் சங்கம், தஞ்சை.
7192 தில்லைச் சிற்றம்பலவன் கோயில் வரலாறு	ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி, ஏ. பி. எல்., பாரிநிலையம் சென்னை.
7193 திருமயிலைத் திருப்புகழ் (உரையுடன்)	திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்
7194 to 7235 மதுரைச் சொக்கநாதர் திருவிளையாடலம்மானை	திருமயிலை சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை.
7236 Hymnes Tamouls. A. caracuvati (கம்பர் இயற்றிய சரஸ்வதி அந்தாதி)	Monsicur Jean Pilloozat Professor an College France Pondichery.
7237 Kalyan Hindi	,,
7238 அடியார் வழிபாடு சிறந்ததேன்	முருகன் அடி பூதூர் துரைவேலு முதலியார் எண் 5 ஆயலூர் முத்தியா முதலித்தெரு ஜார்ஜ டவுண் சென்னை—1.
7239 to 53 சந்தனக்குரவர் நான்மணி மாலை (15 Copies)	திருவாவடுதுறை ஆதீன வெளியீடு
7254 to 55 சிவபூசைத் திரட்டு (2 Copies)	௸
7256 to 70 சந்தானாசாரிய புராண சங்கிரகம் (15 Copies)	௸
7271 to 72 அரிகாதாரதம்மியம் பரப்பிரம விளக்கம் (2 Copies)	௸
7273 திருக்களிற்றுப்படியார் விளக்கக் கட்டுரை	௸
7274 மெய்கண்ட சாத்திரம் சிவப்பிரகாசம்-மூலமும் உரையும்	௸
7275 சிதம்பரம் - கண்கட்டி மடம். ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனார் சைவ சிறுநூல்கள்-முதற்பகுதி	௸
7276 to 78 சீகாழிச் சிற்றம்பல நாடிகள் கலித்துறை முதலியன (3 Copies)	௸

(தொடரும்)

உ

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

		ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	6 00
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	3 00
4	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்)	2 50
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ...	2 25
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ,, ...	1 30
7*	திருவாசகம் (புதிய பதிப்பு) ,, ...	0 50
8*	திருக்கோவையார் - பேராசிரியர் உரையும் பழைய வுரையும் (புதிய பதிப்பு)	2 90
9	ஒன்பதாம்திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு (மூலம்மட்டும்)	0 56
10*	திருமந்திரம் ,, ...	2 50
11	பதினோராந்திரு முறை ,, ...	1 25
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)....	0 25
13	திருக்கைலாயஞானவுலா-உரையுடன்	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்)	2 50
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	3 00
17	தாயுமான சுவாமிகள்பாடல்-குறிப்புரையுடன்	1 25
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)....	1 75
19	கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள் ,, ...	2 75
20	,, யுத்த தேவகாண்டம் ,, ...	2 00
21	,, தக்ஷகாண்டம் ,, ...	1 50
22	கந்தபுராண வசனம் அச்சில்	
23	கந்தர் அலங்காரம்-குறிப்புரையுடன்	0 25
24	கந்தரனுபூதி	0 13
25	கந்தர் கலிவெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	0 37
26	கந்தர்கலிவெண்பா-மூலம் மட்டும்	0 06
27	கந்தர் கலிவெண்பா - மூலமும்-உரையும்	0 37
28	நீதிநெறிவிளக்கம்-ஆங்கிலம் ஹிந்தியும் கூடியது	0 50
29	சகலகலாவல்லிமாலை-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	0 06
30	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும்	1 00
31	திருக்குறள்-அறத்துப்பால் மூலம் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும்	1 50
32	திருக்குறள்-பொருட்பால் ,, ...	2 50
33	திருக்குறள்-காமத்துப்பால் ,, ...	1 00
	டி. 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	4 00

Registered With the Registrar of Newspapers for India
Under No R. No. 1485/57.

Regd No. M. 5574

34	திருக்குறள் மூலமும் குறிப்புரையும் ...	0 75
35	திருக்குறள்—பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	0 13
36	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	0 75
37	திருவுசாத்தானக் கல்வெழுத்துக்கள்	0 37
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்—மதுரைக் கலம்பகம்—நீதிநெறி விளக்கம் – மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை—மதுரை மீனாட்சியம்மை குறம்	2 75
39	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் }	1 25
40	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை-தில்லைச்சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	1 00
41	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம்—சகலகலாவல்லி மாலை }	1 00
42	சிதம்பரச் செய்யுட்கோவை	0 75
43	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (அச்சில்)	
44	தமிழிசைப்பாக்கள் (அச்சில்)	
45	பெரியபுராணம்—உரைநடை	2 00
46	திருவிளையாடற் புராணம்—உரை நடை	2 25
47	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்....	0 50
48	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்)	0 31
49	திருக்கயிலைத் திருமுறை	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	0 13
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால்3ம்பதிப்பு	1 37
53	ஷை ஷை பொருட்பால்	2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ...	1 20

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில் தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச் சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம். ஸ்ரீவைகுண்டம் –'60.